விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 11 புதன்கிழமை (28.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2555)

# மீண்டும் போராட்டத்தில் குதிக்க அரசியல் கைதிகள் தீர்மானம்!

(கொழும்பு)

**தமது விடுதலை தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தீர்மானத்தை தாம் ஏற்கப்போவதில்லை என்று தமிழ் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர். தாம் உண்ணாவிரதத்தை மேற்கொண்டபோது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் வழங்கப்போவதில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக தமிழ் அரசியல் கைதிகள் எச்சரித்துள்ளனர்.**

இதேவேளை இலங்கையில் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துவிட்டது.


தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி சுமார் 200 தமிழ் அரசியல் கைதிகள் நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் 6 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பின்போது சில தீர்மானங்கள எடுக்கப்பட்டுள்ளன.

எனினும் பொதுமன்னிப்புக்கான வாய்ப்புக்கள் இல்லை என்று முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எனினும் பிணை அனுமதி வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.(12)

## இம்மானுவேல் அடிகளாருக்கு அரசு அழைப்பு



(கொழும்பு)

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் அடிகளாரை இலங்கைக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## இன்றும் பலத்த மழை பெய்யும்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் இன்றும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய பகுதிகளில் கடும் காற்று வீசக் கூடும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மக்

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய கொலை வழக்கு விசாரணையில் பங்கேற்கும் டக்ளஸ்



(கொழும்பு)

1987-ம் ஆண்டு தமிழகத்தில் இடம்பெற்ற கொலை தொடர்பான வழக்கு விசாரணைகளில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்கேற்க உள்ளார்.

வீடியோ கொன்பிரன்ஸ் தொழில

24ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்றங்களை ஆராய்ந்தால் இன விரிசல்தான் அதிகரிக்கும் - தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்து போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்ந்தால் இனங்களுக்கு இடையில் நம்பிக்கையின்மை மேலும் அதிகரிக்கும் என்பதுடன் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியமும் உள்ளது என்று மகிந்த ஆதரவு அணியின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவ

24ஆம் பக்கம் பார்க்க....

## கருணாவையும் இணைத்து புதிய கூட்டணி ஆனந்தசங்கரி அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கருணா உட்பட பல கட்சிகளை இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையில் புதிய கூட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அக்கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கே.கே.எஸ். நாச்சிமார் கோவில் பகுதியில் உள்ள தமிழர் விடுதலைக கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் ஊடகவியியலாளர்களைச் சந்தித்து கருத்து வெளியிடுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர், தற்போது எமது கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் வேறு



24ஆம் பக்கம் பார்க்க....

## அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியசாலை விவகாரம்
## இன்று கப்பலுக்குள் செல்கிறது ஐவரடங்கிய விசாரணைக்குழு

(காலி)

சர்ச்சைக்குரிய அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் க்ளஞ்சியசாலை (கப்பல்) தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவும் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது. இதற்காக மேற்படி கப்பலுக்குள் பாரிய நிதி மோசடிகள் விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக குழுவின் ஐந்து உறுப்பினர்கள் இன்று புதன்கிழமை செல்லவுள்ளனர்.

இது சம்பந்தமாக பொலிஸ்மா அதிபருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த சந்தர்ப்பர்த்தில் கடந்த ஜனவரி மாதம் அவன்கார்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான மகநுவர எனப்படும் மிதக்கும் ஆயுதக்

24ஆம் பக்கம் பார்க்க....

## புகையிரதம் மோதி குடும்பஸ்தர் பலி

(மல்லாவி)

மகளின்திருமணத்துக்காகசென்ற குடும்பஸ்தர் ஒருவர் புகையிரதத்துடன் மோதி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி 153-ம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தைச் சேர்ந்த நீக்லஸ் ஸ்ரீபன் (வயது 63) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் பாதுகாப்பற்ற கட

24ஆம் பக்கம் பார்க்க....

## கைதிகளை விடுவிக்காவிட்டால் சத்தியாக்கிரகம் நடத்தப்படும்!
## சிவில் அமைப்புக்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பாக தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாவிட்டால் சத்தியாக்கிரக போராட்டம் அலலது உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்படுமென சிவில் அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய முன்னணி ஆகியன இதனைத் தெரிவித்துள்ளன.

அத்துடன், நாளை வியாழக்கிழமை தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து மருதானையில் தேசிய மாநாடொன்று நடத்தப்படவுள்ளதாக சிறைக் கைதிகளின் உரிமைகளுக்கான அமைப்பின் அழைப்பாளர் சட்டத்தரணி சேனக பெரேரா தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் தனியான விசாரணை நடத்த முடிவு

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் உயிரிழந்ததாக நம்பப்படும் வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் தனியான விசாரணை நடத்த மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

## மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்த மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு அண்மையில் அதன் அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளித்திருந்தது.

இந்நிலையில் குறித்த ஆணைக் குழுவின் விசாரணையின் போது முறைப்பாடு செய்யப்பட்ட வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் தற்போது தனியான விசாரணை மேற்கொள்ள குறித்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கென உயர் நீதிமன்ற நீதியரசர்கள் உள்ளடங்கிய ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இக்குழுவின் விசாரணையில் சனல் 4 தொலைக்காட்சி அல்லது இந்த விசாரணை குறித்து ஆர்வமுள்ள தரப்பினர் அளிக்கும் சாட்சியங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளின் பின்னர் அடுத்த ஆண்டின் முற்பகுதிக்குள் வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவும் மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

**வெள்ளைக்கொடி விவகாரம், இசைப்பிரியா கொலை தொடர்பில் ஐந்து பேர் அடங்கிய நீதிபதிகள் குழு விசாரணை**

வெள்ளைக்கொடிகளுடன் சரணடைய வந்த விடுதலைப்புலிகள் படையினரால் கொல்லப்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கையின் அரசாங்க பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது

காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இந்த விசாரணையை நடத்தும் என்று அதன் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்கான குழு விரைவில் அமைக்கப்பட்டு சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சனல் 4 தொலைக்காட்சியின் காணொளியும் கருத்திற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்காக ஐந்து பேரடங்கிய நீதிபதிகள் குழு அமைக்கப்படும். இந்தக்குழு பல மாவட்டங்களுக்கும் சென்று தகவல்களை திரட்டி தமது அறிக்கையை அடுத்த வருட முதல் பகுதியில் வெளியிடும் என்றும் பரணகம குறிப்பிட்டுள்ளார்.


அத்துடன் இந்தக்குழு இசைப்பிரியா படையினரால் கைது செய்யப்பட்ட, கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலும் தமது விசாரணைகளை நடத்தும் என்று பரணகம தெரிவித்துள்ளார்.

எனினும் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் வெள்ளைக்கொடி ஏந்திவந்த விடுதலைப் புலிகள் கொல்லப்படவில்லை என்று கூறி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (12)

## மரண அறிவித்தல்

### நாகேந்திரம் கருணாகரன்

(கருணா)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல-477 கொம்பறுத்தகுளம் துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் கருணாகரன் (கருணா) 2015.10.25ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னார் நாகேந்திரம் காலஞ்சென்ற விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் வேலுப்பிள்ளை-நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தமிழ்ச்செல்வியின் (ஆசிரியர்-விநாயகபுரம் அ.த.க பாடசாலை) அன்புக் கணவரும், சோபா (கனடா), சபேசன் (கனடா), அனுசரு (கனடா) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் டினர்சனின் அன்பு பேரனும், விஜயராணி (கரும்புள்ளியான்), அமரர் சிறிதரன், திலகவதி (பிரான்ஸ்), பாஸ்கரன் (மல்லாவி), பகீரதன் (பூவரசன் குளம்), தமிழ்ச்செல்வன் (திருவையாறு), தயாபரன் (சுவிஸ்), சுதாகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அறிவழகன் (வலயக் கல்வி அலுவலகம்-துணுக்காய்), மகாலிங்கம் (பிரான்ஸ்), ஜெயாநந்தி, தனலட்சுமி (ஆசிரியர்-பொன்னகர் அ.த.க பாடசாலை), ராஜரூபினி -மாவட்டச் செயலகம் கிளிநொச்சி), தர்சினி (சுவிஸ்), கணேசலிங்கம் (கனடா), சந்திரவதனா, தில்லைநாயகி, அமரர் சுந்தரலிங்கம், அமராவதி (கனடா), சாந்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் இன்று (2015.10.28) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.477,
கொம்பறுத்தகுளம், துணுக்காய்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(ஓ-2556)

## கடற்றொழிலாளி கடலலையில் மாயம்

(பொற்பதி)

கடற்றொழிலில் ஈடுபட்ட கடற்றொழிலாளி கடலலையினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் வடமராட்சிக் கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது.

இதில் வடமராட்சிக் கிழக்கு 10ஆம் வட்டாரம் உடுத்துறையைச் சேர்ந்த ஸ்ரீறிஸ்கந்தராஜா ஜீவநேசன் (வயது-22) என்ற கடற்றொழிலாளியே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மீன்பிடிப்பதற்காக சென்ற படகினை கரையில் இருந்து கடலுக்குள் தள்ளிவிடுவதற்காக சிறிது தூரம் அவர் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்போது கடல் சுழியில் இவர் அகப்பட்டு கடலில் இழுத்துச் செல்லப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டு கடற்படையின் உதவியுடன் தேடுதல் நடத்தியபோதும் மதியம் வரையில் இவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

மாலை 5.30 மணியளவில் இவ் இளைஞரின் சடலம் செம்பியன்பற்று வடக்கு கடற்கரையில் கரை ஒதுங்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடலலையினால் இழுத்துச் செல்லப்பட்ட மேற்படி இளைஞர் தொடர்பாக கடற்றொழிலாளர்களால் உடனடியாக வடமராட்சி கிழக்கு கடற்படைமுகாமுக்கு தெரியப்படுத்தியதையடுத்து காங்கேசன்துறை கடற்படையினரின் தேடுதல் நடவடிக்கை தீவிரமாக இடம் பெற்றது.

அத்துடன் மன்னாரில் இருந்து வரவழைக்கப்பட்ட சுழியோடிகளாலும் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. எனினும் இவ் இளைஞரின் உடல் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பிலான பொலிஸ் விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5,64)

## கொக்குவிலில் மாணவனுக்கு போதைப்பொருள் விற்பனை

### இருவரையும் மடக்கியது பொலிஸ்

(யாழ்ப்பாணம்)


கொக்குவில் பகுதியில் கஞ்சா மற்றும் பாவுல் ஆகிய போதைப் பொருட்களை மாணவன் ஒருவருக்கு விற்பனை செய்த ஒருவரையும் அவற்றை வாங்கி தன்வசம் வைத்திருந்த மாணவனையும் கைது செய்துள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ பரிசோதகர் யு.கே. வூட்லர் தெரிவித்தார். நேற்றைய தினம் கிடைத்த ரகசிய தகவலையடுத்தே இவர்கள் இருவரையும் கைது செய்ததாக அவர் கூறினார்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் ஒருவருக்கு வெளியிலிருந்து ஒருவர் போதைப் பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பாக நேற்று மாலை எனக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து உதவிப் பொலிஸ் பரிசோதகர் தனபால அடங்கிய குழுவினர் அவர்களைப் பிடிக்க களமிறங்கினர். மேற்கொண்ட விசாரணை அடிப்படையில் தொழிலநுட்பக் கல்லூரி மாணவன் ஒருவரை போதைப் பொருட்களுடன் கைது செய்தனர்.

அம்மாணவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அவரிற்கு போதைப்பொருட்களை விற்பனை செய்தவர் கைது செய்யப்பட்டார் எனவும் யாழ்.பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். கைது செய்யப்பட்டுள்ளவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்ற சமூகவிரோத செயல்களையும் போதைப்பொருள் பாவனையையும் கட்டுப்படுத்துவதற்கும் இளைஞர்களை குறித்த குற்றச் செயல்களிலிருந்து பாதுகாப்பதற்கும் பொதுமக்களது ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (4)

## எழுபதுகளில் எம்மை எழவைத்த ஆசான் ஆழவைத்துச் சென்றான் மோட்சத்துத் தேரில்



### கப்டன் நா.சோமசுந்தரம்

(முன்னாள் பிரதி அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

வழுவது இன்றி வாழ்ந்தனன் தமிழன் பாரில்
பழுதிலா புகழீன்று ஏகினன் மோட்சத் தேரில்
அழுவதா அன்றில் தொழுவதா சோகம் நேரில்

**எழுபதுகளில் எம்மை எழவைத்த ஆசான்**
எண்பதைத் தொட்டு எம்மனம் நின்றனன் நீ
செண்பகன் அழைப்பினால் சொக்கனிடம் சேர்ந்தனன்

தொண்ணூறுகளில் "இந்துவின்" முகாமையில் சோமரின் ஆட்சி
கண்ணூறாய்ப் பணி செய்தோம் பலருண்டு சாட்சி
வெண்ணீறு உள்ளவரை சோமர் நினைவிருக்கும்
அன்றுவரை வெண்நீல முகிலில் அவர் ஆவி கலந்திருக்கும்

(ஓ-2559)

**தங்களிடம் கற்று தங்களின் கீழ் பணிபுரிந்த...**

சதா.நிமலன் (பிரதி அதிபர்-யாழ்.இந்துக் கல்லூரி)
செல்லத்துரை தேவரஞ்சன் (யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர்)
சண்.தயாளன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் -யாழ்.வலயம்)
மகேசன் கஜேந்திரன் (அதிபர்-யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

ALREADY ISSUED 24000 CERTIFICATES

MICOM THE GREAT

SINCE 1997 IN COLOMBO

Law Classes

ACCA, CIMA, AAT, CMA, IBSL, LLB,
Law college subjects - Per Subject 15,000.00
Classes also start in Colombo very soon.



English Classes

IELTS - 15,000.00
Spoken English with Grammer
Diploma in English - 10,000.00
English A/L, O/L, University } 1000.00 Per month

Conducted by
Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
L.L.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

(ஓ-2558)

Contacting Numbers: 077 284 2556,076 707 7558, 077 395 0215

## டெங்குநோயால் 40 பேர் பலி!

ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் டெங்குநோயினால் 40 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் தகவல்களின் பிரகாரம், கடந்த வருடத்தைப் பார்க்கிலும் இவ்வருட ஆரம்பம் முதல் இம்மாதத்தின் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் டெங்குநோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் தொடர்பில் பதியப்பட்டுள்ள தகவல்களின் படி, 21 ஆயிரத்து 636 பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் 40 பேர் உயிர் இழந்துள்ளனர். இந்த உயிர் இழப்பு எண்ணிக்கையானது, 0.81 வீதத்திலிருந்து 0.25 வீதமாகக் குறைவடைந்துள்ளது.


கடந்த ஜனவரி மாதம் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது 6 ஆயிரத்து 342 ஆகப் பதியப்பட்டுள்ளது. டெங்குநோயினால் அதிகளவு பாதிக்கப்பட்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகிறது. கொழும்பு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 947 பேரும் அதற்கு அடுத்தபடியாக கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 8 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் நுளம்புகள் பெரும் இடங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி நுளம்புகள் பெருகி வளரும் இடங்களை அழிப்பதுடன், சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு ஆபத்துக்களை குறைக்க முடியுமெனவும் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளானோர் தாமதிக்காது அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொது மக்களுக்கு ஆலோசனையும் வழங்குகிறது. (இ-7-10)

## 2016ம் ஆண்டில் சகலருக்கும் மின்சாரம் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க அறிவிப்பு

(கொழும்பு)



இலங்கையில் 2016 ஆம ஆண்டு ஆகும் போது சகல வீடுகளுக்கும் மின்சாரம் கிடைக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இந்த நாட்டின் மின்சாரத் தேவையில் 97 வீதமானவற்றை வழங்கியுள்ளோம்.

நாட்டில் தற்போது சுமார் 2 இலட்சம் வீடுகளுக்கே மின்சாரம் வழங்கப்பட வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

## பரிசளிப்பு விழா

யாழ்.கோப்பாய் சரவணபவா னந்த வித்தியாலய பரிசளிப்பு தின நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ.ஆனந்த ராஜா தலைமை யில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராகயாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-136)

# 10 லட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு!

(கரணவாய்)

**நெல்லியடி நகரப்பகுதி நகைக்கடையொன்றில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.**

மேற்படி திருட்டுச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பூட்டப்பட்ட கதவுகள் உடைக்கப்படாது கூரை வழியாக உள் இறங்கிய திருடர்கள் காட்சிப்படுத்தப்பட்ட நகைகளை மாத்திரம் திருடிச் சென்றுள்ளனர் எனவும் அலுமாரிகளில் வைக்கப்பட்ட நகைகள் எவையும்திருடப்படவில்லை என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

## இலத்திரனியல் அடையாள அட்டை ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும்

நிதியமைச்சர் தகவல்



ஜனவரி மாதம் முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, இலங்கையர்களுக்கான இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கை, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தற்போது பாவனையில் உள்ள தேசிய அடையாள அட்டை, இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையாக மாற்றப்பட்டு விநியோகிக்கப்படும் என கூறப்படுகின்றது. (இ-7-10)

## நவம்பர் மாதம் 2-9 வரை சிறுவர் பாதுகாப்பு வாரம்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை சிறுவர் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சிறுவர்களின் பாதுகாப்பு பெற்றோர், பாடசாலை பிரதானிகள் மற்றும் வளர்ந்தோர் அனைவரினதும் கடமை என்பதை உணர்த்தும் வகையில் கல்வி அமைச்சு இவ்வாரத்தை பிரகடனப்படுத்தவுள்ளது.

இவ்வாரத்தில் பல்வேறு செயற்திட்டங்களை செயற்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தல் போன்றவை தொடர்பில் அனைத்து தரத்திலுள்ள மாணவர்களும்தெளிவு படுத்தப்படவுள்ளனர்.

அனைத்து பாடசாலை மாணவர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஆலோசனைகளை வழங்க ஒரு ஆசிரியரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும் சிறுவர் பாதுகாப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல், சிறுவர் பாதுகாப்பு குழுக்களை அமைத்தல், பாடசாலை சமூகத்தை தெளிவுபடுத்தல் போன்ற செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மேலும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பொறிமுறை ஒன்றை செயற்படுத்தல், வீதி நாடகம், சுவரொட்டி வரைதல் போன்ற பல்வேறு முறைகளும் பயன்படுத்தப்படவுள்ளன.

பாடசாலையுடன் சமயஸ்தலங்களையும் தொடர்புபடுத்தி தெளிவூட்டும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு அதிகாரிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அங்கிருக்க முடியாது

தலதா அத்துகோரள அதிரடி

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அதிகாரிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வெளிநாட்டு தூதரகங்களில் கடமையாற்ற அனுமதிக்கப்படாது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளிநாடு சென்றிருந்த போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் அதிகாரிகளை சந்தித்த போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தூதரங்களில் கடமையாற்ற அதிகாரிகள் விரும்புகின்றனர்.

எனினும் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களின் நலன்களை உறுதி செய்ய நடவடிக்கை எடுப்பதில்லை.



வெளிநாடுகளில் இரணடு ஆண்டுகளே அதிகாரிகள் கடமையாற்ற முடியும் என்ற போதிலும் சிலர் நீண்ட காலம் கடமையாற்றி வருகின்றனர்.

அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது எனவும் பல இலங்கையர்கள் துன்பங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அமைச்சர் தலதா அதுகோரள தெரிவித்துள்ளார்.

தூதர்களின் பணிப்புரைகளுக்கு அமைய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டுமெனவும அவர் கோரியுள்ளார். (இ-7-10)

## மேர்வினுக்கு எதிராக நிதிமோசடி விசாரணைப்பிரிவில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.



களனி பிரதேசத்தில் நடைபெற்ற காணி விற்பனை யொன்று தொடர்பாகவே இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த ஆட்சியின் போது களனி பிரதேச சபைக்கு உரித்தான காணியொன்றை மேர்வின் சில்வாவும் அவரது ஆதரவாளரான சிங்கப்பூர் சரத் என்பவரும் இணைந்து போலி உறுதிப்பத்திரம் தயாரித்து, விற்பனை செய்துள்ளனர்.

ஒரு காணித்துண்டு 25 இலட்சம் ரூபா வீதம் 31 காணித்துண்டுகள் இவ்வாறு போலி உறுதிப்பத்திரத்தின் மூலம் விற்கப்பட்டுள்ளது. இதனைக் கொள்வனவு செய்தவர்களும் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் என்று தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த காணியை மீட்டுத்தருமாறு கோரி களனி பிரதேச சபையின் முன்னாள் அங்கத்தவர்கள் இரண்டு பேர் நேற்று இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிதிமோசடிப் பிரிவில் புகார் அளித்துள்ளனர்.

போலி உறுதிப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்பட்ட காணியை மீண்டும் பிரதேச சபைக்கு பெற்றுத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-10)

## குற்றவாளிகளின் தகவல்களை திரட்ட நீதிமன்றம் அனுமதி

கொழும்பு நகரில் குற்றவாளிகளாக பதிவாகியுள்ள 254 பேரிடமிருந்து புகைப்படங்கள் மற்றும் கைவிரல் அடையாளங்களை பெற்றுக்கொள்வதற்காக அவர்களை கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவிற்கு பிரசன்னமாகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டில் குற்றவாளிகளாக பதிவாகியுள்ளவர்கள் தொடர்பான தகவல்கள் கடந்த 10 வருடங்களாக திரட்டப்படாமையினால், அவர்க ளின் புகைப்படங்களை பெற்றுக் கொள்ளவேண்டும்என கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்க ப்பட்டுள்ளது. (இ-7)

## சஜின் மீண்டும் பல்டி!

முன்னாள் பிரதியமைச்சர் சஜின் வாஸ் குணவர்த்தன, மீண்டுமொரு அரசியலில் பல்டியடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உத்தியோகப்பற்றற்ற துணை ஜனாதிபதி போன்று அதிகாரம், செல்வாக்கைக் கொண்டிருந்தவர் சஜின் வாஸ் குணவர்த்தன. எனினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனாதிபதி செயலக வாகன மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தனக்கெதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தந்திரோபாயமாக முன்னாள ஜனாதிபதி குடும்பத்தாரின் ஊழல், மோசடிகளை காட்டிக் கொடுக்க சஜின் உடன்பட்டிருந்தார். அதற்கேற்ப ஒருசில சம்பவங்கள் தொடர்பான தகவல்களும் வெளியாகின.

இந்நிலையில் சஜின் மற்றும் மகிந்தவுக்கு நெருக்கமான கண்டிப்பகுதி முக்கிய அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டின் பேரில் தற்போது சஜின் மனம் மாறியுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் மகிந்தவுக்கு எதிரான சாட்சியத்திலும் பின்வாங்கல் நடக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இன்றைக்கு வரைக்கும் சஜினுக்கும் அவர் மனைவிக்கும் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### தோழியை தாக்கிய விவகாரம்

## இந்திய வீரர் மிஸ்ரா கைது



தோழியை தாக்கிய குற்றச்சாட்டில் இந்திய கிரிக்கெட் அணியின்சுழல்பந்துவீச்சாளர் அமித்மிஸ்ரா பெங்களூருவில் நேற்று கைது செய்யப்பட்டு, பின்னர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்.


தென்னாபிரிக்காவுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் தொடங்குவதற்கு முன்பாக, பயிற்சிக்காக கடந்த மாதம் அமித் மிஸ்ரா பெங்களூர் வந்திருந்தார். அவரை சந்திப்பதற்காக அசோகா நகரில் அவர் தங்கியிருந்த நட்சத்திர ஹோட்டல் அறைக்கு கடந்த மாதம் 25ஆம் திகதி அவரது பெண் தோழி ஒருவர் சென்றுள்ளார். அப்போது அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் தான் தாக்கப்பட்டதாக மிஸ்ராவின் பெண் தோழி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார். இதையடுத்து விசாரணை நடத்திய பொலிஸார், மிஸ்ராவின் மீது இரண்டு நாட்களுக்குள் வழக்குப்பதிவு செய்தனர். இதைத்தொடர்ந்து ஒரு வாரத்துக்குள் விசாரணைக்கு நேரில ஆஜராகும்படி மிஸ்ராவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

ஆனால், மிஸ்ரா மீதான புகாரை அவரது பெண் தோழி திரும்பப் பெற்றதாக செய்திகள் வெளியாகின. அடுத்த சிலநாட்களில், தான் புகாரை வாபஸ் வாங்கப்போவதில்லை என்று பெண் தோழி கூறியதாகவும் தகவல்கள் வெளியானது.

இந்நிலையில், அமித் மிஸ்ராவிடம் நேற்று 3 மணி நேரம் விசாரணை செய்த பெங்களூரு பொலிஸார் பின்னர் அவரை கைது செய்தனர். இருப்பினும் உடனடியாக அவர் ஜாமீனில் விடுதலை செய்ய ப் பட்டதாக பொலிஸார் தெரிவித் தனர்.

## அமெரிக்காவில் ஆரம்பமாகும் அதிரடி சச்சினுடன் கைகோர்த்த ஷேவாக்




சச்சின், வோர்ன் இணைந்து நடத்தும் ஜாம்பவான்களின் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் முன்னாள் அதிரடி வீரர ஷேவாக் விளையாட உள்ளார்.

அமெரிக்காவில் நடக்கும் இந்த Cricket All Stars இருபது-20 போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி தொடங்குகிறது. இதில் சச்சின் பிளாஸ்டர்ஸ்- வோர்ன் வோரியர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த தொடரில் ஏற்கெனவே கங்குலி, லக்ஷ்மன், ரிக்கி பொன்ரிங், கலிஸ், லாரா, முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார, ஜெயவர்த்தன ஆகியோர் பங்கேற்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற இந்திய அதிரடி வீரர் ஷேவாக்கும் இணைந்துள்ளார்.

இதனை சச்சின் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக சச்சின் டுவிட்டர் பக்கத்தில், தனது தனித்துவமான பாணியில் சிறப்பாக விளையாடும் எனது நண்பரான ஷேவாக்கை இருபது-20 ஒல் ஸ்ரார்ஸ் தொடருக்கு வர வேற்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## சச்சினின் கேரளாவை 3:2 என வீழ்த்தி முதலிடம் பிடித்தது ஹிருத்திக்கின் புனே



ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடரின் 22 லீக் போட்டியில் பொலிவூட் நடிகர் ஹிருத்திக் ரோஷனை சக உரிமையாளராகக் கொண்ட புனே சிட்டி அணி, 3:2 என்ற கோல் கணக்கில் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் கேரளா பிளாஸ்டர்ஸை வென்றது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ். எல்.,) கால்பந்து தொடரின் இரண்டாவது சீசன் தற்போது நடக்கிறது.

புனேயில் நடந்த லீக் போட்டியில் புனே - கேரளா அணிகள் மோதின.

போட்டியின் முதல் நிமிடத்தில் கேரளாவின் மொகமட் ரபி முதல் கோல் அடித்தார். இதற்கு பதிலடி கொடுத்தார் புனே வீரர் உசே. இவர் 16, 23ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல் அடிக்க புனே 2:1 என முன்னிலை பெற்றது.

மீண்டும் அசத்திய ரபி, 30 ஆவது நிமிடத்தில் மீண்டும் கோல் அடிக்க, முதல் பாதி 2:2 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.


போட்டியின் 72ஆவது நிமிடம் புனே வீரர் சான்லி ஒரு கோல் அடிக்க, கேரள அணியினரால் இதற்கு பதிலடி தரவே முடியவில்லை.

முடிவில் புனே அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் புனே அணி 12 புள்ளிகளுடன் (6 போட்டி, 4 வெற்றி) புள்ளிப் பட்டியலில் முத லிடத்தில்உள்ளது. 6 போட்டியில்ஒரு வெற்றி மட்டும் பெற்ற கேரளா அணி (4 புள்ளி) கடைசி இடத்தில் உள்ளது.

### சிம்பாப்வேயுடனான இருபது-20 தொடர்

## நபி, நஜிபுல்லாவின் துடுப்பாட்டத்தினால் ஆப்கானுக்கு 6 விக்கெட்டுக்கள் வெற்றி





டெஸ்ட் அந்தஸ்துள்ள அணியான சிம்பாப்வே அணியை ஒரு நாள் தொடரில் வீழ்த்தி வரலாற்று வெற்றியை பதிவு செய்த ஆப்கானிஸ்தான் அணி, அடுத்து நடைபெற்ற இருபது - 20 தொடரின் முதல் போட்டியில் மொஹமட் நபி, நஜிபுல்லா ஷட்ரானின் கலக்கான துடுப்பாட்டத்தினால் 5 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் நெருக்கமான வெற்றியை பதிவு செய்து அசத்தியது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர், 2 இருபது- 20 தொடரில் பங்குபற்றுகிறது.

இதில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாறு படைத்திருந்தது.

இந்நிலையில் 2 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

புலவாயோ, குயின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு சிகான்டர் ராசா - சிபாபா இணை அதிரடியான ஆரம்பம் வழங்கியது.

இவர்கள்இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 12.3 ஓவர்களில் 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து அணிக்கு வலுவூட்டியிருந்த போதிலும்,

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் ஆப்கானிஸ்தானின் பந்துகளை சமாளிக்க முடியாமையால் சிம்பாப்வே அணியால் கணிசமான மொத்த ஓட்ட எண்ணிக்கையை அடைய முடியாமல் போயிற்று

இறுதியில் சிம்பாப்வே அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களையே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சிக்கன்டர் ராசா 59 (49 பந். 5 பவுண்., ஒரு சிக்ஸ்), சிபாபா 54 (47 பந். 6 பவுண்.) ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பில் டவ்லட் ஷட்ரான் 3, மொஹமட் நபி, ரஷிட் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

154 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணிக்கு, மொஹமட் ஷசாட்டின் ஆரம்பமும், மொஹமட் நபி, நஜிபுல்லா ஷட்ரான் இணை வீழ்த்தப்படாத 5ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 69 ஓட்ட இணைப்பாட்டமும் கைகொடுக்க ஆப்கானிஸ்தான் அணி 19.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர் ஷசாட் 34, மொஹமட் நபி 33, நஜிபுல்லா ஷட்ரான் 37 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் சிசேரோ, மஷகட்சா, வில்லியம்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் அசத்திய ஆப்கானின் டவ்லட் ஷட்ரான் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவதும் இறுதியுமான போட்டி இதே மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.



# ஐ.தே.கவுடன் இணைந்ததால்தான் சுதந்திரக்கட்சி பாதுகாக்கப்பட்டது

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இணைந்து அரசாங்கம் ஒன்றை நடத்தி செல்வதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க முடிந்துள்ளதாக நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

குறித்த அமைச்சுக்கு உரிய அலுவலகம் ஒன்றை பதுளை பிரதேசத்தில் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போது இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சிகளுக்கும் 113 ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் இடம் கொடுக்கவில்லை.

எனினும் ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவையென்றால் இலகுவாக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைத்திருக்க முடியும். எவ்வாறாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாத்துக் கொள்ள முடிந்துள்ளதாக டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-7-10)



கோட்டம், வலயம், மாவட்டம் மற்றும் மாகாணமட்டத்தில் இடம்பெற்ற சிறுவர் அரங்க நாடகப் போட்டியில் யாழ்.ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
நாடகப் போட்டியில் பங்குபற்றியிருந்த மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம்.

# வினைத்திறன் தடைதாண்டல் பதவி உயர்விற்கான பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர் மத்திய நிலையம் நடத்தும் ஆசிரியர் சேவையின் பதவியுயர்விற்கான வினைத்திறன் தடைதாண்டல் (மொடியூல்-3) பயிற்சிநெறி நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை வரணியிலுள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்டுள்ள 3-I தர ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சிநெறியின் ஆரம்ப வைபவம் நாளை காலை 8 மணிக்கு ஆசிரியர் மத்திய முகாமையாளர் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி.லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன்கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தியும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலக கணக்காளர் தி.திருவருட் செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதன் போது பரிசில்களை பிரதீபா வேதநாயகன் வழங்கவுள்ளார். (இ-5)

# தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் விநாயகர் பாமாலை நூல் அறிமுக நிகழ்வு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். நீராவியடி சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப் பினரும் விரிவுரையாளருமாகிய கு.பாலஷண்முகன் திருமுறை ஓதுவார். தமிழ்ச்சங்கச் செயலர் இரா.செல்வவடிவேல் வரவேற்பு ரையாற்றுவார்.

யாழ். இலங்கை வங்கியின் மேற்றரக்கிளை முகாமையாளர் தி.செந்திநாதன் தொடக்கவுரையையும் யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நூலாசிரியர் பற்றிய நினைவுரையையும் ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வருகை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசன் ஆகியோர் நூல் பற்றிய கருத்துரைகளையும் வழங்குவர்.

ஏற்புரையை பவானி சிவகுருசிங்கமும் நன்றியுரையை தமிழ்ச்சங்கத்துணைச்செயலர் லோ.துஷிகரனும் ஆற்றுவர்.

இந்நூல் மாருதப்புரவீகவல்லி காலத்தில் யாழ்ப்பாணத்தில் எழுந்த ஏழு விநாயகர் திருக்கோவில்கள் மீது அமரர் பொ.கனகரத்தினத்தால் பாடப்பட்ட ஆயிரம் திருப்பாடல்களைக் கொண்டமைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)









ஏகத்துவ பல்கலைக்கழகத்தின் ஏற்றமிகு சிருஷ்டி கர்த்தாக்களாகத் திகழும் ஸ்ரீ கல்வி பகவதி பகவானின் வரயக்ஞம் பயிற்சி நேற்றையதினம் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட ஏகத்துவ இயக்கத்தின் தலைமையில் "உள்மனதில் மாற்றம் வந்தால் வெளி உலகத்தில் மாற்றம் வரும்" எனும் தொனிப்பொருளில் உமா கல்வி தாசாயி நேற்றையதின பயிற்சிகளை வழங்கினார். நேற்றையதினம் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 6 மணிவரை நடைபெற்ற இப் பயிற்சி இன்றையதினமும் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப.6 மணிவரை நடைபெறவுள்ளது. (படங்கள்:-பொ.சோபிகா)

# ராசி பலன்

28.10.2015
(ஐப்பசி 11, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பிரதமை பிற்பகல் 4.12 மணிவரை
பரணி முன்னிரவு 11.37 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
ஐப்பசிப்பரணி, சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம், அர்த்தம்<br>முன் இரவு 5.15 ற்கு<br>இட-சந் | | |
| | | | குரு<br>செவ்<br>சுக் |
| சனி | சூரி<br>புத | | ராகு |

**மேடம்:** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு படுத்திக் கொள்வீர்கள்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கடகம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** வருங்கால நலன்கருதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் இனிமை ஏற்படும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசைகாட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், விருந்துகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் அகலும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தேகநலனில் முன்னேற்றமுண்டு, விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வாகன சுகமுண்டு.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மீனம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், தொழிலை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும், இறைவழிபாடுகளில் நம்பிக்கை கூடும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

## இலங்கை கடற்படையால்

# இந்திய மீனவர் 23 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

**இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்து மீறி மீன்பிடி யில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பிலேயே நேற்று முன்தினம் அதிகாலை மேற்படி மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் இந்தியாவின் ஜெகதாப்பட்டினம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அதிகாலை மேற்படி மீனவர்கள் 23பேரும் இலங்கையில் வட பகுதி கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து வடக்கு கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர். இதன்போது மேற்படி கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காங்கேசன் துறை மற்றும் நெடுந்தீவு கடற்படையினர் மேற்படி மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இதில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 13 மீனவர்களும் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து 10 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்மீனவர்கள் மீன் பிடிக்கு பயன்படுத்திய 4 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் 23 பேரும் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடல் எல்லையை அத்துமீறும் மீனவர்களின் அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4-60)

### மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது



## தாலிக்கொடி அறுத்தவர் யாழில் மடக்கிப் பிடிப்பு

சண்டிலிப்பாயிலுள்ள பலசரக்கு கடையின் உரிமையாளரான பெண்ணொருவரின் தாலிக்கொடியை அறுத்தவர்களில் ஒருவர் யாழில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

தட்டாதெருச் சந்தியில் பிறிதொரு பெண்ணின் தாலிக் கொடியை அறுக்க முற்பட்ட போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தட்டாதெரு பகுதியில் பெண்ணொருவரின் தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் செல்ல முயற்சித்துள்ளனர்.

எனினும் இத்திருடர்களின் பின்னால் வந்த ஆட்டோ சாரதியொருவர் திருடர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்துள்ளார்.

பிடிபட்ட திருடன் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட திருடனே சண்டிலிப்பாயிலும் குடும்பப் பெண்ணொருவரின் தாலிக் கொடியை அறுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் சண்டிலிப்பாயிலுள்ள கடையொன்றுக்கு சென்ற இருவர் கடையில் குளிர்பானம் வாங்குவதுபோல் பாசாங்கு செய்துவிட்டு கடைக்காரப் பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தப்பிச் சென்ற மற்றொருவரை தேடிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

## சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலையின் மாகாணமட்ட சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஒறேற்றர் சுப்ரமணியம் அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயன் பழைய மாணவர் சங்கத் தலைவர் சேது விபுலானந்தா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் என்.துரைராஜசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது வாழ்த்துரையினை யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான், பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் திருமதி எஸ்.மகேஸ் வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும்

தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் முதலாத் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் துர்க்கா தேவி தேவஸ்தானத்துக்கு அருகிலுள்ள தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய ச. சிவானந்தராசா தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஒரு வருட காலத்தில் அதனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட உள்ளன.

தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு தெல்லிப்பழைத் தமிழ்ச்சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்படும்.

தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கலையார்வம் கொண்டவர்கள், தமிழ்மீது பற்றுக் கொண்டவர்கள், எம்தாய் மொழியைப் பாரெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பேரவாக் கொண்டவர்கள், தமிழை மூச்சாகக் கருதுபவர்கள் அனைவரும் எமது தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராகவோ அன்றி சாதாரண உறுப்பினராகவோ இணைத்து எமது தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் தாய் மொழியாம் தமிழ்மொழியின் எழுச்சிக்கும் பேருதவி புரியும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றேன் என்றும், உங்கள் மேலான சிந்தனைகள், நல் ஆலோசனைகளை எமக்கு வழங்கி எமது தமிழ்ச் சங்கத்தை பெறுமதி மிக்க ஓர் உயரிய சங்கமாக்கிட வேண்டும் என்றும் உங்கள் அனைவரையும் அன்புரிமையுடன இருகரம் கூப்பி அழைக்கின்றேன் என்றும் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலாளர் லயன் சி.ஹரிகரன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7-10)

## இரத்தினேஸ்வரி வித்தியாலய பரிசளிப்பு இன்று

(இருபாலை)

யாழ். அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய பரிசளிப்பு தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் தி. ரவிச்சந்திரன் பாடசாலை பிரதான மண்டபத்தில் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண ஆரம்பக் கல்வி ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஆரம பக் கல்வி ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சுவாமிநாதன், ஓய்வு பெற்ற அதிபரும் முன்னாள் ஆசிரியருமான தே. சிவலிங்கராஜா, ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி க.கண்மணி. வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் க.சந்திர போஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-130)




## யாழில் 415 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் தாபரிப்பு பெற்றோர் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இதுவரை 415 மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாக வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவினால் தாபரிப்பு பெற்றோர் திட்டத்தின் கீழ் பெற்றோரை இழந்த 61 மாணவர்களுக்கு சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இத் திட்டமான்து வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவின் 2015 ஆம் ஆண்டு திட்டத்தில் இலங்கையில் உள்ள ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவில் இருந்தும் மாணவர் ஒருவரை தெரிவு செய்து அதே பிரிவில் நன்கொடையாளர்களை இனம்கண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு உதவும் திட்டமாகும்.

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு 15 பிரதேச செயலர் பிரிவின் ஊடாகவும் 339 நன்கொடையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு 415 மாணவர்களுக்கு இந்த உதவுதொகை வழங்கப்பட்டு வருகின்றது.

இத் திட்டத்தில் இம் முறை யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்இணைந்து கொண்டு 61 மாணவர்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளனர். மாதாந்தம்இந்த உதவுதொகைகள் மாணவர்களு க்கு வழங்கப்படும். இது வரவேற்கத்தக்க விடயம் ஆகும்.

அத்துடன் இத் திட்டம் சரியான முறையில் பயன்படுகிறதா என்பதனை எமது உத்தியோகத்தர்கள் கண்காணிப்பார்கள் மேலும் இத் திட்டதல்இணைந்து கொண்ட மாணவர்களின் விபரங்கள் கல்வித்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டு அவர்கள் ஊடாகவும் மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவினால் தாபரிப்பு பெற்றோர் திட்டத்தின் கீழ் பெற்றோரை இழந்த 61 மாணவர்களுக்கு சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் கே. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன், பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். மேலும் இந்த நிகழ்வில் ஐ.ஐ.எஸ்.சிற்றிகம்பஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.விக்னேஸ் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (படங்கள்: பொ.சோபிகா)

# கல்விக்காக வழங்கும் உதவியே நிலையானது

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**இலவசமாக வழங்கப்படும் எந்தவொரு உதவியும் தொடர்ச்சியாக பயன்படாது. ஆனால் கல்வி கற்பதற்காக செய்யும் உதவி மட்டுமே நிலையானது என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் இசுதிரிய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராககலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது மாவட்டத்தில்கல்விகற்பதற்குவறுமை தடையாக இருக்கக்கூடாது என்பது எமது குறிக்கோள் ஆகும். நாம் செய்யும் எந்தவொரு உதவியும் பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

அந்த வகையில் கல்வி கற்பதற்காக மாணவர்களுக்குச் செய்யும் உதவி நிலையானது. அந்த உதவிகளை மாணவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

மாணவர்களின் கல்விக்காக உதவும் திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை மாண வர்கள் கவனத்திற்கொண்டு இது கல்விக்காக மட்டும் வழங்கப்படும் உதவி மட்டுமல்லாமல் சமூகத்துக்கு பணி புரிய வேண்டும் என்று வழங்கப்படும்உதவிஎன்பதைகருத்திற்கொண்டுசெயற்படவேண்டும்.

கல்வித் தரத்தை ஊக்குவிப்பதற்கும் சிறந்த நற் பிரஜைகளை எதிர்காலத்தில் உருவாக்குவதற்கும் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு திட்டங்களையும் அவற்றின் நோக்கங்களையும்வெற்றியடையச் செய்யும் பொறுப்பு மாணவர் கைகளிலேஉள்ளதுஎனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மைத்திரி அரசாங்கமும் காடழிப்பு மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது

## பாலித தேவப்பெரும தெரிவிப்பு



(கொழும்பு)

மைத்திரி அரசாங்கமும் காடழிப்பு மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் மீண்டும் காடழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த அரசாங்கம் சுமார் 700 முதல் 800 ஆண்டுகள் பழைமையான மரங்களை வெட்டி விற்பனை செய்தது.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சிலர் மக்களுக்கு விவசாய காணிகளை வழங்கும் போர்வையில் காடழிப்பு மேற்கொள்கின்றார்கள்.

இதனால் பாரியளவில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமை வருத்தமளிக்கின்றது. அண்மையில் நான் முல்லைத்தீவு, கொக்கிளாய் போன்ற பகுதிகளுக்கு பயணம் செய்திருந்தேன்.

காடழிப்பு பற்றி ஆராயவே நான் சென்றிருந்தேன்.

சுமார் 30 - 40 ஏக்கர் காடுகள் ஒவ்வொரு இடங்களிலும் அழிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டிருந்ததனைக் காணக் கூடியதாக இருந்தது.

எந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும் காடழிப்பு மேற்கொள்வோரை தண்டிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும கொழும்பு பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் இடம்பெற்ற காலத்தில் வடக்கு, கிழக்கில் காடுகள் அழிக்கப்படவில்லை எனவும்,

போரினால் ஏற்பட்ட ஒரே நன்மையாக காடழிப்பு இடம் பெறாததனை குறிப்பிட முடியும் எனவும் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்திறகு 2 வேலையாட்கள்தேவை. பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. (பெண் பிள்ளைகள்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்

**லைடன் புடைவை நிலையம்,**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## யாரிடம் பேசுவது?

யார் என்னை புரிந்து கொள்வார்? நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்? நான் என்ன தவறு செய்தேன்? என்னால் ஒன்றுமே முடியாது நான் என்ன செய்வது?

**எம்முடன் பேசுங்கள்**
**கை கொடுக்கும் நண்பர்கள்**
**104, 4, ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**
**காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை**
☆ மதசார்பற்றது ☆ ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776

Sponsored by enlightenment circle an arm of saiva munnetta sangam UK

(2116)


# பெண்களில் 77 வீதமானவர்கள் எதிர்பாராத விதமாக கருத்தரிப்பு

இலங்கைப் பெண்களில் 77 வீதமானவர்கள் எதிர்பாராத விதமாக கருத்தரிப்பதாக சுகாதார அமைச்சின் குடும்ப நலப் பிரிவு மருத்துவர் சஞ்சீவ கொடகந்த தெரிவித்துள்ளார்.

எதிர்பாராதவிதமாக கருத்தரிப்பதனால் சிசுக் கொலைகள், சிசுக்களை கைவிட்டுச் செல்லுதல், பராமரிக்க முடியாமை, கருக்கலைப்பு போன்ற சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

நாட்டில் நாள் ஒன்றுக்கு 650 பெண்கள் தங்களது கருவை கலைக்கின்றனர். குடும்பத் திட்ட வழிமுறைகளை பின்பற்றாமை இதற்கான பிரதான காரணமாகும். நாட்டின் பெரும்பான்மையான பெண்கள் இரண்டு குழந்தைகளையே விரும்புகின்றனர்.

இதனை விடவும் கூடுதலான எண்ணிக்கையில் குழந்தைகள் இருந்தால் அது எதிர்பாராத விதமாக பிறந்த குழந்தை அல்லது குழந்தைகளாகவே 92 வீதமான சந்தர்ப்பங்களில் காணப்படுகின்றது.

குடும்பத் திட்டம் தொடர்பிலான மூட நம்பிக்கை மற்றும் போதியளவு தெளிவின்மையினால் எதிர்பாராத விதமான கருதரித்தல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

குடும்ப திட்ட அமைபபினால் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7-10)


**யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**
**நூற்றாண்டு நிறைவு விழா**
**(1915-2015)**



**காலம் : 28.10.2015 புதன்கிழமை**
**இடம் : இலங்கைவேந்தன்கலைக்கல்லூரி,நீராவியடியாழ்ப்பாணம்.**

**மூன்றாம் நாள் -பி.ப 3.30**

| பழைய மாணவர், பெற்றோர்களுக்கான நிகழ்வு | நிகழ்ச்சி நிரல் |
|---|---|
| தலைவர்<br>திரு.ந.வித்தியாதரன்<br>(ஸ்தாபகத் தலைவர், பழைய மாணவர் சங்கம்)<br>பிரதம விருந்தினர்<br>கௌரவ ஈ.சரவணபவன்<br>(பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம்)<br>சிறப்பு விருந்தினர்<br>திரு. இ.இரவீந்திரன்<br>(செயலாளர், கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்) | *விருந்தினரை அழைத்து வருதல், மங்கல விளக் கேற்றல், இறை வணக்கம் , வரவேற்பு நடனம்,*<br>ஆசியுரை<br>கலாநிதி<br>ஆறு. திருமுருகன்<br>(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)<br>வரவேற்புரை, தலைமையுரை, சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை, கலை நிகழ்வுகள் நன்றியுரை (சி-2545) |



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:70செவ் 8 இல்<br>உயரம்: 183cm<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: B/5108 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:AAT, HNDIT, B.COM, CHARTERED<br>தொ.இ: G/5113 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 58செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5110 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 6 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: G/5114 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 72<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5111 | பிறப்பு: 1965 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 21<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/5116 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 22செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/5115 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5125 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:-021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# பயணப்பொதியில் வைக்கப்பட்ட 15 பவுண் நகைகள், பணம் திருட்டு

(மல்லாவி)

**நெட்டாங்கண்டல் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட வீடொன்றின் புதுமனை புகு விழா முடிவடைந்த நிலையில் ஆழ்ந்த உறக்கத்தில் வீட்டாரும், விருந்தினர்களும் இருந்த போது வீட்டின் பின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் பயணப் பொதியில் வைக்கப்பட்டிருந்த 15 பவுண் தங்க நகைகளையும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்ற சம்பவம் நடைபெற்றுள்ளது.**

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெட்டாங்கண்டல் கிராமத்தில் உள்ள ஓய்வு பெற்ற கிராம அலுவலர் எஸ்.சந்திரன் என்பவரது மகளின் வீட்டிற்கான புதுமனைப் புகுவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது பல இடங்களிலிருந்து விழாவிற்கு உறவினர்கள் வருகைதந்திருந்தனர். குறித்த கொண்டாட்டம் முடிந்த நிலையில் உறவினர்கள் மறுநாள் அதிகாலை உற க்கத்துக்குச் சென்றனர்.

இச் சமயத்தில் திருடர்கள் வீட்டின் பின்புறமாக உள்ள வேலியை வெட்டி உள்நுழைந்து வீட்டின் பின் பக்க கதவை உடைத்து வீட்டினுள் நுழைந்தனர்.

இதன்போது உறவினர்கள் உறங்கிக் கொண்டிருந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த பயணப் பொதியை எடுத்த திருடர்கள் அதனுள் வைக்கப்பட்டிருந்த 15 பவுண் தங்க நகைகளையும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த ஏனையவர்களின் தங்க நகைகள் நிகழ்விற்கு அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற பணம் தெய்வாதீனமாக தப்பியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரினால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

# விவசாயிகளுக்கு பொதுக்கூட்டம்

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட புத்துவெட்டுவான் கமக்கார அமைப்பிலுள்ள விவசாயிகளுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புத்துவெட்டுவான் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறுமென துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

புத்துவெட்டுவான் கிராமத்தில் அமையப் பெறவுள்ள உரக்களஞ்சியசாலை தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன் எதிர்காலத்தில் விவசாயத்திற்கான உதவித்திட்டங்கள் மற்றும் கமநல அபிவிருத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-15)




# முல்லைத்தீவில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர்த்தாங்கி மக்கள் பாவனைக்கு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று கிழக்கு கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடிநீர்த் தாங்கி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சமூக அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த குடிநீர் திட்டத்தை நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.ஏ.அமீன வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் குறித்த நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் முஹம்மது முபாக் (மௌலவி) மற்றும் தண்ணீரூற்று பள்ளி நிர்வாக சபை, கிராம அபிவிருத்தி, மாதர் அபிவிருத்தி உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன் மூலம் தண்ணீரூற்று கிழக்கு கிராமத்திலுள்ள வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு

# நிரந்தர வைத்தியரை நியமிக்காவிடின் அடுத்த வாரம் ஆர்ப்பாட்டம் தொடரும்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்கக் கோரி இப்பிரதேச மக்கள் நேற்று முன்தினம் அடையாள உண்ணாவிரதம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களிலும் வவுனியா வடக்கு பகுதியின் நவ்வி குஞ்சுக்குளம், பாலமோட்டை உள்ளிட்ட கிராமங்களிலும் மன்னார் மாவட்டத்தின் வலையன் கட்டு, கீரிசுட்டான் உள்ளிட்ட கிராமங்களிலும் வாழும் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் மருத்துவ தேவைகைள நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளதுடன் சுமார் அறுபது வருடங்கள் பழைமை வாய்ந்த நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படாத நிலையில் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது மருத்துவ தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நிரந்தர வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படாத நிலையில், குறித்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு உரிய தரப்புகளுக்கு மகஜர்களையும் கையளித்த போதும் இதுவரை எந்தவிதமான தீர்வுகளும் கிடைக்காத நிலையில் கடந்த வாரம் குறித்த வைத்தியசாலை முன் மறியல் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஆகியோர் கருத்தில் எடுக்காத நிலையில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் "மத்திய அரசே மாகாண அரசே நட்டாங் கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமனம் செய்" என்ற கோரிக்கையை முன்வைத்து நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் அடையாள உண்ணா விரதப் போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தனர். பிற்பகல் 2 மணி வரை இடம்பெற்ற உண்ணாவிரதப்போராட்டத்திற்கு உயரதிகாரிகளோ அல்லது அரசியல் வாதிகளோ எவரும் சமுகம் தராத நிலையில் உண்ணா விரதப்போராட்டம் நிறைவு பெற்றுள்ளது .

இதே நிலை தொடருமானால் அடுத்து வரும் தினங்களில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றை முடக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-250)

# கௌரவிப்பு நிகழ்வு

(சிவநகர்)

கிளிநொச்சி சிவநகர் முதியோர் சங்க அங்கத்தவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் அ.இரகுபதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ச.பி.அமலராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வைத்திய நிபுணர் மா.ஜெயராஜா,இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளைத் தலைவர் சு.தருமரத்தினம்,கிளிநொச்சி மாவட்ட சமூகசேவை அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவை பொருளாளர் சி.சந்திரராசா, கரைச்சி முதியோர் நலன் பேணும் அலுவலர் எஸ்.காந்திமதி, சிவநகர் அ.த.க.பாடசாலை அதிபர் கே.ராஜரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (2-254)

# வசந்தன் கொலை தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

வ.மா.சபை உறுப்பினர் பிரதமருக்கு கடிதம்

(குருமன்காடு)

வன்னி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவானந்தம் சண்முகநாதன் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த போது கொல்லப்பட்டவர்களை இனம் கண்டு கொள்வதற்காக நாடாளுமன்ற குழு ஒன்றை தாங்கள் நியமிக்க எடுத்த முடிவு பாராட்டத்தக்கதொன்றாகும்.

இந் நிலையில் வன்னி மாவட்டத்தை சேர்ந்த அர்ப்பணிப்பு மிக்க மக்கள் நலன் சார்ந்து சிந்தித்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் சரவண பவானந்தம் சண்முகானந்தம் அவரது 3வயது மகன் வக்சலன் ஆகியோரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களையும் இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்வதாக அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# சர்வதேச சிறுவர் முதியோர் தினநிகழ்வு

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு முழங்காவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

பிரதேச செயலர் சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன், பூநகரி கோட்டக்கல்வி அலுவலர் சு.தர்மரத்தினம், பூநகரி தபாலதிபர் கி.சஜிதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-254)




ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று பிற்பகல் 2 மணியளவில் பண்பாட்டு பேரணியானது கோலாட்டம், கும்மி, செம்பு நடனம், குட மூதல், தவில் ஆகிய கலைப்பாரம்பரியங்களை பறைசாற்றியவாறு ஒட்டுசுட்டான் இலங்கை வங்கி முன்பாக இருந்து ஆரம்பமாகி பிரதேச செயலகத்தை வந்தடைந்த போது...

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் 11 பேருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

**இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்படை யினரால் கைது செய்யப்பட்ட 11 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் நேற்று உத்தரவிட்டார்.**



இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து தலைமன்னார் கடற்பரப்பினுள் மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை தலைமன்னார் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அம் மீனவர்கள் பயணித்த ரோலர் படகு களையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டஇந்தியமீனவர்கள் 11 பேரும் 3 படகுகளில் இலங்கை கடற்பரப் பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையில் கடல் றோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற் படையினர்குறித்த மீனவர்களை கைதுசெய்து தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்ப டைத்தனர். இந்தநிலையில் குறித்தமீனவர்க ளிடம் விசாரணைகளை மேற்கொண்ட தலை மன்னார் கடற்படையினர் அவர்களை நேற்று மதியம் மன்னார்மாவட்ட கடற்றொழில் திணை க்கள அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் நேற்று மதியம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப படுத்தினர்.

இதன்போது விசாரனைகளை மேற் கொண்ட மன்னார்பதில்நீதவான்குறித்த 11 இந்தியமீனவர்களையும்எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (2-281)




## சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு

(மல்லாவி)

உலக அஞ்சல் தினம் 2015 ஆம் ஆண்டை முன்னிட்டு வடபிராந்திய அஞ்சல் திணைக் களத்தினால் நடத்தப்பட்ட உப அஞ்சல் அதி பர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் யோகபுரம் உப அஞ்சலகத்தின் உப அஞ்சல் அதிபர் திருமதி ப. சுகந்தினி வடக்கு மாகாணத் தில் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக வடக்கு மாகாணத்தின் வடக்கு மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தினால் வெற்றியாளர்களுக்கு கடிதம்மூலம்அறிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கான சான்றிதழ், பரிசில் என்பன நேற்று காலை 9 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற வடபிராந்திய அஞ்சல் தின விழாவில் வைத்து வழங்கப்பட்டது . (2-15)

## யுத்தத்தினால் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு பொருட்கள் அன்பளிப்பு

(மல்லாவி)

வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவிலுள்ள சமுர்த்தி அலுவலகர்களின் ஒத்துழைப்புடன் யுத்தத்தின் போது பெற்றோரை இழந்த மாண வர்கள் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்கள் உள் ளடங்கலாக 40 பேருக்கு மழைக் கவசம் மற் றும் புத்தகப்பை என்பன வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை 9.30மணியளவில் துணுக் காய் பிரதேச செயல கத்தின் மாநாட்டு மண்டபத்தில் துணுக்காய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ். பானுமதி தலை மையில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கின்ற பெற்றோரை இழந்துள்ள மாணவர்கள் மற் றும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்கள் உள்ளடங்கலாக 40 பேருக்கு மழைக்கவசம், புத்தகப்பை என் பன வழங்கப்பட்டுள்ளது அத்தோடுவட்டு இந்துவாலிபர் சங்கத்தினால் ஏற்கனவே இப் பிரதேச செயலக பிரி வில் முன்னெடுக்கப்பட்டு வரும் தெரிவு செய்யப் பட்ட 20 மாணவர்களுக்கு தலா ஆயி ரம் ரூபா வீதம் மாதாந்த உதவித் தொகையாக வழங்கப் பட்டு வரும் நிலையில் மேலும் 21 மாணவர்க ளுக்கு மாதாந்தம் உதவித் தொகை வழங்கவுள் ளதாக இந்நிகழ்வில் கலந்து கொண்ட வட்டு. இந்து வாலிபர் சங்க பிரதி நிதிகள் அறிவித் தனர். (2-15)

## கௌரவிக்கும் நிகழ்வு

(குருமன்காடு)

எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் உட்பட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி திங் கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் ரி.கே. இராசலிங்கம் தலைமையில் நடைபெறும். குறித்த நிகழ்வை வவுனியா வர்த்தக சங்கத்தினர் ஏற்பாடு செய் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# அனைத்து குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படும்

## பூநகரி மக்களிடம் உறுதியளித்தார் வடக்கு முதலமைச்சர்

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சபையினால் மக்கள் குறைகேள் வேலைத்திட்டமொன்று நேற்று முன்தினம் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கிளிநொச்சி மாவட் டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட வேரவில்,கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களில் வடக்கு மாகாண முத லமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலை மையிலான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதி மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது வலைப்பாடு றோமன் கத் தோலிக்க பாடசாலையில் வலைப்பாடு மக் களை சந்தித்த முதலமைச்சர், மற்றும் அமை ச்சர்கள் அப்பகுதி மக்களின் தேவைகள், பிரச்சி னைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தனர்.

இதன்போது மிக முக்கியமாக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமலிருக்கும் A 32 பிரதான வீதியில் இருந்து வலைப்பாடு வரையான பிரதான வீதியின் புனரமைப்பு



தொடர்பாக உரிய கவனத்தை செலுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். மேலும் இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் பற்றாக்குறை, வைத்திய வச திகள் இல்லாமை தொடர்பாகவும் மக்கள் முறைப்பாடுகளை முன்வைத்திருந்தனர்.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட் டங்களின் இழுவை படகுகளாலும் தாங்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

அதனை தொடர்ந்து கிராஞ்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கிராஞ்சி பகுதி மக்களை சந்தித்து முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் கலந்துரையாடினார்.

இதன்போதும் மக்கள் வீதி மற்றும் வைத் திய வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை, உள் ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் பா.டெனீ ஸ்வரன் ஆகியோர் வேரவில இந்து மகாவித் தியாலயத்தில் வேரவில் மக்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

வேரவில் பிரதேச வைத்தியசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறை மற்றும் வைத் திய வசதி இன்மை, அன்றாடம் செய்திகளை அறிந்துகொள்ளவும் அறிவுசார் நூல்களை தமது பிள்ளைகள் வாசித்து பயன் பெறவும் தமக்கு ஒரு நூல் நிலையம் அவசியமாகவுள் ளது என மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதிக்கான பிர தான வீதிகள் 2016 ஆம் ஆண்டில் முழு மையாக புனரமைத்துக் கொடுக்கப்படும் என வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீ ஸ்வரன் உறுதியளித்தார்.

தொடர்ந்து இப்பகுதியில் உள்ள ஆசிரியர் வெற்றிடம் 2016.01.01 இற்குள் பூர்த்தி செய் யப்படும் என கல்வியமைச்சின் செயலாளர் இரவீந்திரன் உறுதியளித்தார்.

அனைத்துக் குறைபாடுகளையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறு தியளித்த முதலமைச்சர், சமகாலத்தில் அதி காரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மக்க ளுக்கும் இடையிலான உறவுப் பாலத்தை அமைக்க முயற்சித்துக் கொண்டிருப்பதாக வும் அதனடிப்படையில் எதிர்காலத்தில் அனை த்தும் வெற்றிகரமானதாக நடைபெறும் என் றும் நம்பிக்கை தெரிவித்தார். (2-9-281)

## பிரபாகரன் தாக்கியதால் நாமும் "பங்கருக்குள்"

### மகிந்த தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் படை தாக்கியதனால் நாமும் பங்கருக்குள். நாங்கள் தாக்கியதால் அவரும் பங்கருக்குள் இருக்க நேரிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகைக்கு சொந்தமானதாக கூறப்படும் இரகசிய கட்டடங்கள் குறித்த புகைப்படங்களும் செய்திகளும் ஊடகங்களிலும் சமுக வலைத்தளங்களிலும் வெளியாகி இருந்தன.

நான்குமாடிகளைக்கொண்ட குறித்த கட்டடத்தின் இரண்டு மாடிகள் நிலத்துக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ளதாகவும் 24 மணிநேர வளி, போக்குவரத்து வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இந்த கட்டடத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருந் தது.

இதன் உண்மைத் தன்மை குறித்து ஜனாதிபதி செயலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, அரச தலைவர்களின் பாதுகாப்புக்காக இவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்போது இந்த இரகசிய ஏற்பாடுகள் குறித்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர் பாதுகாப்பு காரணங்களின் பொருட்டே அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனும் "பங்கர்" அமைத்ததாகவும், அதற்கு காரணம் தாம் தாக்கியமையாலேயே எனவும் , தாம் "பங்கர்" அமைத்தது , அவர்கள் தாக்கியமையாலேயே எனவும் தெரிவித்தார். (இ-7-10)




# இலங்கையின் அபிவிருத்திக்கு ஐ.நா. சபை உதவி தரத்தயார்

### அரசியல் துறைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தியை முன்கொண்டு செல்லவும் பொது கொள்கையின் கீழ் செயற்படவும் ஐக்கிய நாடுகள் சபை தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல்துறை உதவி செயலாளர் மிரோ ஸ்லேவ் ஜென்கா இலங்கையில் ஐந்து நாள் விஜயத்தை முடித்துக்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது விஜயத்தின்போது ஜென்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளியுறவு அமைச்சர் மங்கள, எதிர்க்கட்சி தலைவர் ஆர்.சம்பந்தன், தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட்ட பலரையும் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தினார்.

இதன்போது இலங்கையின் அரசியல் தீர்வு பொறுப்புக் கூறல் செயற்பாடுகள், நல்லிணக்கம், மீள்கட்டமைப்பு மற்றும் பெண்கள் சிறுவர்கள் தொடர்பில் விசேட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது. (இ-7-10)

## சட்ட விரோத ஆவண தயாரிப்பு

### இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் விசா, அடையாள அட்டை, போலி நாணயத்தாள்கள், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு போன்றவற்றைத் தயாரித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கலகெதர பொலிஸார், இருவரைக் கைது செய்துள்ளனர்.

கண்டி, கலகெதர பகுதியில் வைத்தே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்கான உபகரணங்கள் உட்பட, போலி 2 ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்கள் ஆறும், போலி ஆயிரம் ரூபாய் தாள்கள் ஒன்பதும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், போலி அதிர்ஷ்ட இலாபச்சீட்டு 22, பென்ட்ரைவ் ஒன்றும், இறுவெட்டுக்கள் 5, போலி விசா, அடையாள அட்டை தயாரிப்புக்கெனப் பயன்படுத்தும் புகைப்படங்கள் பலவும், கைப்பற்றப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் 40, 21 வயதுடையவர்கள் எனவும் அவர்களை, கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் கலகெதர பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## கராத்தே வீரர் படுகொலை 8 சந்தேக நபர்கள் கைது!

### தலைமறைவானோரை தேடி பொலிஸ் வேட்டை

கின்னஸ் சாதனை வீரரும் இரவு விடுதி உரிமையாளருமான வசந்த சொய்ஸாவின் கொலை தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந்த கொலையை திட்டம் தீட்டிய இருவரில் ஒருவரும் கைதானவர்களில் அடங்குவதுடன் கொலையுடன் தொடர்புள்ள மேலும் 15 பேரை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கின்னஸ் சாதனை வீரர் வசந்த சொய்ஸா அநுராதபுரம் 'கட பணஹ' பகுதியிலுள்ள அவரது சொந்த இரவு விடுதியில் வைத்து கடந்த 24 ஆம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்டார். முகமூடியணிந்து வந்த கும்பல் இவரை கூரிய ஆயுதங்களினாலும் தடிகள், பொல்லுகள் என்பவற்றினாலும் தாக்கி கொலை செய்ததோடு இரவு விடுதியையும் தாக்கி சேதப்படுத்தியிருந்தது.

இந்தக் கொலை தொடர்பில் கைதான கொலையை திட்டம் தீட்டிய நபரும் இதே பிரதேசத்தில் உள்ள இரவு விடுதியொன்றின் உரிமையாளர் என பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கொலையை திட்டம் தீட்டிய அடுத்த நபரும் அநுராதபுரம் பிரதேச இரவு விடுதி உரிமையாளர் என விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் சந்தேக நபர்களிடையே இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற ஒருவரும் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கார், ஆட்டோ, தடிகள், இரும்பு, பொல்லு, வாள் என்பனவும் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முகமூடி சந்தேக நபர்கள் அணிந்து வந்த உடைகள் என்பனவும் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட வசந்த சொய்ஸாவுக்கும் சந்தேக நபர்களுக்கும் (விடுதி உரிமையாளர்கள்) இடையில் சில காலமாக இருந்து வந்த தனிப்பட்ட குரோதம் காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது.

சந்தேகநபர்கள்அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். சந்தேக நபர்களை கைது செய்ய விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.(இ-7-10)

## மத்தியஸ்தர் சபைக் கூட்டம் இடமாற்றம்

(அளவெட்டி)

தெல்லிப்பழை நடேஸ்வராக் கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்று வந்த மத்தியஸ்தர் சபைக் கூட்டம் இடமாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மத்தியஸ்தர் சபைக் கூட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ள மத்தியஸ்தர் சபைக்கூட்டம் மகாஜனக் கல்லூரியிலே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-25)

## அமெ.ராணுவ பொறியியல்பிரிவினர் கிழக்குப் பாடசாலைகளுக்கு விஜயம்

அமெரிக்க இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கிழக்கு மற்றும் தென்னிலங்கைப் பிரதேச பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படக் கூடிய தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் தொடர்பில் இக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாணதத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் தொடர்பிலும் இக்குழுவினர் கவனம் செலுத்தியிருந்ததுடன், அது தொடர்பான விடயங்களையும் ஆராய்ந்துள்ளனர்.

பின்னர் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் தொடர்பிலும் இக்குழுவினா களஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இயற்கை அனர்த்தங்களின் போது பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையிலான செயற்பாடுகள் மற்றும் அமெரிக்க அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை பார்வையிடுவ்து இக்குழுவினரின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## அலரிமாளிகையில் நிலக்கீழ் சொகுசு மாளிகை இல்லை

ஜனாதிபதி மாளிகை போன்று அலரிமாளிகையில் நிலக்கீழ் சொகுசு மாளிகை எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை என்று அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த நிலக்கீழ் அதிசொகுசு மாளிகையொன்று அண்மையில் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இந்த மாளிகை அமைக்கப்பட்டிருந்தது. பொதுமக்களிடையே அச்செய்தி பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மாளிகையில் மட்டுமன்றி அலரிமாளிகையிலும் அவ்வாறான நிலக்கீழ் சொகுசு மாளிகைகள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கிண்டலாக பதிலளித்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும், பிரதமர் அலுவலக விவகாரங்களுக்கான துணை அமைச்சருமான சாகல ரத்நாயக்க, அலரிமாளிகையில் அவ்வாறான பதுங்கு குழி மாளிகைகள் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் காலத்தில் அவ்வாறான நிலக்கீழ் மாளிகைகள் அமைக்கப்படவில்லை என்றும், எனினும் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தேடிப் பார்க்க வேண்டியிருப்பதாகவும் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# போதை மருந்து விற்றால் உடனடியாக அறிவிக்கவும்

**மாணவர்களை இலக்குவைத்து போதை மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் கிடைக்குமாயின், அது தொடர்பில் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையங்களுக்கு தகவல்களை வழங்குமாறு பொலிஸ் திணைக்களம், பொதுமக்களிடம் கோரியுள்ளது.**

இது தொடர்பில் பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாடசாலைகள் மற்றும் தனியார் வகுப்புகள் நடத்தப்படும் இடங்களுக்கு அண்மையில், மாணவர்களை இலக்கு வைத்து பல்வேறு வகையான போதை மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக நாடளாவியரீதியில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன. அதனடிப்படையில், பொலிஸாரினால் பல்வேறு இடங்களில் திடீர் சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறான தகவல்களின் அடிப்படையில், மொறட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ராவனாவத்த பிரதேசத்தில் பிரபல்யமான பாடசாலைக்கு அருகில் போதையூட்டும் மருந்து விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து கடந்த 21 ஆம் திகதி திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.


அவ்விடத்தில் இருந்த மருந்தகத்தில் இருந்து, போதையூட்டும் குளிசைகள் 8 ஆயிரம் கைப்பற்றப்பட்டன. இந்த குளிசைகள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் போதைப் பொருளுக்குப் பதிலாக பயன்படுத்தும் குளிசையாகும்.

இந்தச் சம்பவத்தையடுத்து, மருந்தகத்தின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறான நிலையில், மாணவர்களை இலக்கு வைத்து இவ்வாறான போதையூட்டும் மருந்துகள் விற்கப்படடால் அவை தொடர்பில் பெற்றோர், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வாறான போதையூட்டும் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் கிடைகுமாயின் அவைதொடர்பிலும் தகவல் தருமாறும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# அழகுபடுத்தப்படும் காலி சிறைச்சாலை



பிரான்சின் புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் ரோஸ் ரொபின்சன் எனும் பெண்மணி, காலி சிறைச்சாலை சுற்றுச் சுவர்களை ஓவியங்களால் அழகுபடுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

பொதுமக்களுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து உணர்த்தும் வகையில் இந்த ஓவியங்கள் வரையப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக அவா யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் மற்றும் கராப்பிட்டிய சிறுவர் வைத்தியசாலை போன்றவற்றை தனது ஓவியங்களால அழகுபடுத்தியிருந்தார்.

இந்நிலையில் காலி சிறைச்சாலை நிர்வாகம் மேற்கொண்ட வேண்டுகோளின் பேரில் அவர் தனது குழுவினருடன் தற்போது காலி சிறைச்சாலை சுற்றுச்சுவர்களை அழகுபடுத்தும் வகையில் ஓவியங்கள் தீட்டும் பணியை ஆரம்பித்துள்ளார். (இ-7-10)

# பொலிஸ் ஆணைக்குழுவில் கொண்டயா முறைப்பாடு!

(கொழும்பு)

கொட்டதெனியாவ சிறுமி சேயா படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியசாந்த பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார்.

கொட்டதெனியாவ பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் ஆகியோருக்கு எதிராக அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

கொண்டயாவின் சட்டத்தரணியான உதுல் பிரேமரத்ன சகிதம் அவர் நேற்று முன்தினம் அவர் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு நேரில் வருகை தந்து தனது முறைப்பாட்டைக் கையளித்துளளார்.

சட்டவிரோத கைது, தடுத்து வைத்தல், தாக்குதல் மேற்கொண்டமை, தவறான தகவல்களை சமூகத்தில் பரப்பியமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுகளை அவர் பொலிஸாருக்கு எதிராக முன்வைத்துள்ளதாக சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இனவாதிகளுடனேயே இருக்கிறார் வாசுதேவ

## ராஜித சுட்டிக்காட்டு

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இனவாதிகளுடன் இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இன்று இடதுசாரி கட்சிகள் கிடையாது. இடதுசாரி கொள்கைகள்கிடையாது. நாடாளுமன்ற உறுப்பினர்வாசுதேவவை சகோதரர்என அழைக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள எந்தவொரு சிங்கள இனவாதியையும் இரத்தம் சிந்த வைக்கவல்லை. ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்த வைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளும் சிங்கள இனவாதிகளும ஐககிய நாடுகள்மனித உரிமைப் பேரவை தீர்மானத்தை எதிர்க்கின்றனர். இன்று இந்த நாடு ஓர் இடத்திற்கு வந்துள்ளது.

எவருக்கும் இனவாதத்தை விதைக்க இடமளிக்க முடியாது என ஜே.வி.பி. கூறுகின்றது.

இனவாத சிந்தனைகளை ஜே.வி.பி. கைவிட்டுள்ள்மை வரவேற்கப்பட வேண்டியது என அமைச்சர் ராஜித சேனாரட்ன கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7-10)

# கொலைக் குற்றங்கள் தொடர்பான 88வீதமான விசாரணைகள் பூர்த்தி

இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இடம் பெற்ற கொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் குறித்த முறைப்பாடுகள் தொடரபில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பெரும்பான்மையானவை பூர்த்தியாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. கொலைகள் தொடர்பிலானமுறைப்பாடுகளில் 88 வீதமான விசாரணைகள் பூர்த்தியா கியுள்ளதுடன், பாலியல் வன் கொடுமைகள் தொடர்பிலான 95 வீதமான விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.

இதற்கு மேலதிமாக குற்றச் செயல்கள் தொடர்பிலான 60 வீதமான விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.

ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 336 கொலைகள் இடம் பெற்றுள்ளதாகவும் இதில் 299 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துளளார்.

ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையில் 1280 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இவற்றில் 1194 சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் பூர்த்தியடைந்துளளதாகத் தெரிவித்தார். (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நேத்திரப்பூண்டு

**Botanical Name:** Blepharis repens
**Family:** conthaceae
**Sinh:** Samadana

மெல்லிய பல்லாண்டு வாழும் ஓரினத் தாவர வகையைச்சேர்ந்தது. உரோம அமைப்புக்களைக் கொண்டது. காம்பற்ற இலைகள். ஒரு கணுவில் 4 இலைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.

2 இலைகள் பெரிதாகவும் 2 இலைகள் சிறிதாகவும் இருக்கும். நீள்வட்ட இலைகள். இலைகளின் நுனிப்பகுதி மழுங்கிக் காணப்படும். மேற்பக்கம் பிரகாசமாகவும் கீழ் பக்கம் வெளிறியும் காணப்படும். பூக்கள் ஊதா நிறமானதாகவும் ஒழுங்கற்றதாகவும் இருபாலானதாகவும் காணப்படும்.

யாழ்ப்பாணத்தில் குளக்கரையை அண்டியும் மழைகாலத்தில் வளரக்கூடியதாகவும் காணப்படும் புதுக்காடு பனைப் பகுதியில் மழைகாலங்களில் இதன் பரம்பலைக் கூடுதலாகக் காணலாம்.

நேத்திரப் பூண்டின் சாறு 100 மில்லி, நல்லெண்ணெய் 300 மில்லி சேர்த்துக் காய்ச்சி தைல பதத்தில் வடித்து வாரத்தில் 2 நாட்கள் தலைக்கு வைதது முழுகி வர கண் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும்.



**நேத்திரப் பூண்டின் மருத்துவக் குணங்கள்**

**கண் நோய் குணமாக**

கண்பார்வை மங்கல், மாலைக் கண், கண் எரிச்சல், கண்களில் குத்து வலி, கண் சிகப்பு, புகைப்படலம் காணுதல், வெள்ளெளுத்து, பீளை சாறுதல், கண்ணில் பூவிழுதல் இவற்றைக் குணப்படுத்தும்.

நேத்திரப்புண்டுக்கொடியை வேருடன் எடுத்து பொடியாக நறுக்கி 50 கிராம் எடுத்து பாத்திரத்தில் போட்டு 100 கிராம் நல்லெண்ணெயை விட்டு 15 நாட்கள் வரை வெயிலில் வைத்து எடுத்து காலை, மாலை இரண்டு துளி வீதம் விட்டு வந்தால் மேலே கூறிய கோளாறுகள் குணமாகும்.

தொற்று நோயான கண் நோய் வந்தால் இதன் இலையைக் கொண்டு வந்து ஒரு சட்டியை அடுப்பில் வைத்து ஒரு தேக்கரண்டியளவு சிற்றாமணக்கு எண்ணெயை விட்டு எண்ணெய் நன்றாகக் காய்ந்தவுடன் அதில் இலைகளைப் போட்டு வதக்கி இளஞ்சூடாக இருக்கும் பொழுதே அதைக் கண் இமைகளின் மேல் வைத்துக்கட்டி காலையில் அவிழ்த்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

இவ்வாறு ஐந்து நாட்கள் செய்தால் கண் நோய் பூரண குணமாகும்.

இதன் முழுச்செடியையும் நன்கு அரைத்து புண்களுக்கு வைத்துக்கட்ட புண்கள இலகுவில் ஆறும்.

உடற்தாதுக்கள் பலம் பெற வேருடன் கூடிய நேத்திரப் பூண்டு, ஓரிதழ் தாமரை, விஷ்ணுகிராந்தி ஒவ்வொன்றும் சம அளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு கால் பங்காக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி அருந்த உடற்கட்டுக்கள் பலப்படும்.

நித்திய கல்யாணிப் பூக்களையும் நேத்திரப் பூண்டையும் எடுத்து குளிர்ந்த நீரில் 20 நிமிடங்கள் ஊறவைத்து வடித்து கண் கழுவிவர கண்கள் குளிர்ச்சி அடைவதுடன் கண் எரிச்சலும் நீங்கும்.

நேத்திரா என்றால் வடமொழியில்கண்எனப்பொருள்படும். கண் சம்பந்தமான நோய்களுக்கு நேத்திரப் பூண்டு சிறந்த மூலியாகும்.

நேத்திரப்பூண்டு சாறு எடுத்து கண்ணைச் சுற்றி பூசிவர கண்நோயின் உபத்திரவங்கள் குறைந்து கண்நோய் முற்றிலும் ஆறும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


# கண்மூடித்தனமாக செயற்படவேண்டாம் அமெரிக்காவை எச்சரிக்கிறது சீனா

## போர்க்கப்பலை சீனக்கடல் எல்லைக்குள் நகர்த்தியமை குறித்து கடும் சீற்றம்

**தென் சீனக்கடலில் சீனா அமைத்து வருகின்ற செய றகை தீவுக்கு நெருக்கமாக அமெரிக்கா தனது போரக கப் பல்களை நகர்த்தியுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.**



ஏவுகணைகளைத் தாக்கியழிக்கும் ஏவுகணைகளைக் கொண்ட யுத்தக் கப்பல்களை, சீனா கடலில் அமைத்து வரும் தீவுக்கு அருகாக




அமெரிக்கா நகர்த்தியு ள்ளது. சீனாவின் எல்லை யான 12 கடல் மைல் தூர எல்லை யில் அமைந்துள்ள சிறுதீவுகளுக்கு அமெரிக்கா அத்துமீறி நுழைந் துள்ளது.

இதன்மூலம் சீனாவின் சுதந்திரமான கடற்போக்குவரத்தில் அமெரிக்கா மிகவும் கடுமையான ஒரு சவாலை விடுத்துள்ளதாக சீன அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை இடம்பெற்றதா என உறுதிப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

இது உண்மையானால் நாங்கள் அமெரிக்காவுக்கு ஒரு ஆலோசனை சொல்கிறோம் அதாவது செயற்படுவதற்கு முன்னர் மீண்டும் ஒருமுறை செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம். கண்மூடித்தனமாக செயற்பட வேண்டாம். அத்துடன் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கவேண்டாம். சீனாவின் தெற்கு மற்றும் கிழக்கு கடலில் பெரும்பகுதி சீனாவுக்குரியது.

தென்கிழக்கு ஆசியாவின்ஏனைய நாடுகள் சிறு தீவுக்கூட்டங்களுக்குப் போட்டியிடுகின்றன.

சீனாவின் எல்லைக்குட்பட்ட கடற்பகுதியில் வெளித்தெரியும் சிறு தீவுக்கூட்டங்கள் இணைக்கப்பட்டு தீவாக மாற்றப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை சீனா கடந்த 2013இன் இறுதியில் ஆரம்பித்திருந்தது.


சட்டத்திற்கு உட்பட்டே நாம் செயற்படுகிறோம் அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்த போது மேற்படி திட்டத்தில் இராணுவ மயப்படுத்தும் நோக்கமில்லை என்று கூறியிருந்தோம். எனினும் அமெரிக்கா இதனை நம்பத்தயாராக இல்லை. இராணுவ நோக்கங் களுக்காகவே இதனை நாம் செய்வதாக அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இது ஒரு மிகப் பெரிய துறைமுக வலயம் எனறு சீனா தெரிவித் துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி கூறும்போது. "செவ்வாய்க் கிழமை காலை யு.எஸ். எஸ் லாசன் போர் கப்பல் ஸ்பார்ட்லி தீவு அருகே 12 கடல் மைல் தூரத்தில் ரோந்து சென்றது. அந்தப் பகுதி சீனாவுக்கு உட்பட்ட பகுதி அல்ல. அது சீனாவால் அறிவிக்கப்பட்ட செயற்கைதீவுதான். அதிபர் ஒபாமா வின் ஒப்புதலின் பேரில் இந்த ரோந்துப்பணி நடை பெற்றது" என்றார்.

இதனிடையே அமெரிக்காவின் பதிலை சீன தரப்பு கண்டித்துள்ளது. சீன வெளியுறவுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறும்போது. "அமெரிக்கா எதையும் செய்யும் முன் இருமுறை யோசிப்பது நல்லது." என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென் சீனக் கடல் பகுதியில் புதிதாகப் பெரும் தீவு ஒன்றை சீனா உருவாக்கி வருகிறது. விமான தளம் அமைக்கும் விதத்தில் இந்த தீவு உருவாக்கப்படுகிறதாக அமெரிக்கா ஏற்கெனவே தகவல வெளியிட்டது.

தென் சீன கடலில் இருக்கும் குறிப்பிட்ட தீவால் ஜப்பான் - சீனா இடையே மோதல் நிலவி வருவதால் சர்ச்சைக்குரிய தீவாக இது அறிய ப்படுவது குறிப் பிடத் தக்கது. (3-7)

# பள்ளி மாணவிக்கு தொல்லை கொடுத்த நபர் மின் கம்பத்தில் கட்டி வைத்து உதைத்த தந்தை



சீனாவில் தனது மகளுக்கு தொல்லை கொடுத்த நபரை தந்தை ஒருவர் மின் கம்பத்தில் கட்டி வைத்து உதை த்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியு ள்ளது.

சீனாவில் பாடசாலை மாணவி ஒரு வரை சூ (ஒரு) என்ற 50 வயது மதிக்க த்தக்க நபர் ஒருவர் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்ததாக கூறப்படுகிறது.

காலை மற்றும் மாலை வேளைகளில் மாணவியை பின் தொடர் ந்து செல்லும் அவர் இத்தகைய செயலில் ஒரு வாரத்துக்கும் மேலாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இதையறிந்த மாண வியின் தந்தை தனது மகள் பாடசா லைக்கு செல்லும் போது அவரின் பின்னால் மறை ந்து வந்துள்ளார்.

அப்போது சூ தனது மகளை கிண்டல் செய்வதை பார்த்த தந்தை அவரை கையும் களவு மாக பிடித்துள்ளார்.

பின்னர் அவரை நன்றாக அடித்து அருகில் உள்ள மின் கம்பத்தில் கட்டி வைத்தார்.

இது குறித்து அறிந்த பொலிசார் சம்பவ இடத்துக்கு சென்று சூ வை மீட்டு சென்றனர். மேலும் விசாரணையில் சூ தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது மகளை கிண்டல் செய்தவரை மின்கம்பத்தில் கட்டி வைத்து அடித்த தந்தையின் செயலுக்கு பலரும் சமூக வலைத் தளத்தில் பாராட்டு தெரிவித்துள்ளனர். (3-7)

# இந்தோனேசியாவில் ஓரினச் சேர்க்கையாளருக்கு 100 பிரம்படி வழங்கும் சட்டம் அமுலுக்கு வந்தது

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் அசே மாகாணத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு தண்டனையாக பொது இடத்தில் வைத்து நூறு பிரம்படி வழங்கும் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. அத்துடன், இதுபோன்ற செயலில் ஈடுபடுவோர்க்கு நூறு மாத சிறை தண்டனையோ, அபராதமாக அரசுக்கு ஒரு கிலோ தங்கமோ வழங்க வேண்டி வரலாம் என்றும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த 2006-ம் ஆண்டு இப்பகுதியில் பிரிவினைவாதிகள் போரை நிறுத்துவதற்காக அரசுடன் செய்து கொண்ட அமைதி ஒப்பந்தத்தில், இந்தோனேசியாவிலேயே முதல் முறையாக இஸ்லாமிய சட்டமான ஷரியாவை இங்கு நடைமுறைப் படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

அதிலிருந்து, கள்ளத்தொடர்பு வைத்திருப்போருக்கு பிரம்படி தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. இதேபோல, சூதாட்டம், மது அருந்துவது போன்றவற்றுக்கும், வெள்ளிக் கிழமை தொழுகைக்கு வராதவர்கள் மற்றும் இறுக்கமான உடைகளை அணியும் பெண்களுக்கும் பொது இடத்தில் வைத்து சாட்டையடி தண்



டனை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நாட்டின், மத்திய அரசின் தலையீட்டால், கள்ளத்தொடர்பு வைத்துக்கொள்பவர்களை சாகும் வரை கல்லால் அடிக்கும் தண்டனை வழங்கப்படுவது சமீபத்தில் நிறுத்தப்பட்டது. இந்நாட்டின் மத்திய அரசு சட்டத்தைப் பொறுத்தவரை ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது தண்டனை வழங்கப்பட வேண்டிய குற்றமில்லை. ஆகவே, மனித உரிமைக் கழகம் அசே மாகாணத்தில் வழங்கப்பட்டு வரும் இத்தகைய தண்டனைகள் நாட்டின் சிறுபான்மையினரின் உரிமைகளை காக்கும் மத்தய அரசின் சட்டத்தை மீறுவதாக உள்ளது என குறிப்பிட்டுள்ளது. எனினும், இந்தத் தண்டனைகள் மக்களை ஒழுங்கான முறையில் வழிநடத்தவே கடைப்பிடிக்கப்படுவதாக ஷரியாவின் தலைவர் சியாரிசால் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் வசிக்கும் முஸ்லிம் அல்லாத ஒரு சதவிகித மக்கள், தங்களின் விருப்பப்படி இந்தோனேசியாவின் மத்திய அரசின் சட்டத்தையோ அல்லது அசே மாகாணத்தின் சட்டத்தையோ பின்பற்றும் உரிமையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# தற்கொலைத் தாக்குதலுக்கு புதிய பெண்கள் படையணி

## ஐ.எஸ். அமைப்பு உருவாக்கம்

ஐ.எஸ். அமைப்பினர் மனிதவெடி குண்டு தாக்குதல் நடத்துவதற்காக பெண்களை வைத்து புதிதாக ஒரு படையை உருவாக்கியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் எதிரிகளின் நிலைகளை அழிப்பதற்காக புதிதாக பெண்களை கொண்டு தற்கொலைப் படையை உருவாக்கியுள்ளதாக சிரியாவில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்கள் அமைப்பில் உள்ள வெளிநாட்டு பெண்களை இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தாமல் உள்ளூர் பெண்களையே அவர்கள் அதிகமாக, பயன்படுத்துவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக ஏராளமான பெண்கள் தெரிவு செய்யப்படுவதாகவும் அவர்களுக்கு ஏராளமான பணம் அளிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.


மேலும் தாய்நாட்டை காப்பாற்



றுவது நமது கடமை.எனவே உயிரை இழப்பதற்கு தயங்கக்கூடாது. இங்கு இறப்பவர்கள் சொர்க்கத்தில் தங்களின் கணவருடன் மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்று கூறி அவர்களை மூளைச்சலவை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை தாக்குதல் நடத்துவதற்காக போதிய குழந்தைகள் இல்லாததாலும். பெண்கள் மீது யாருக்கும் சநதேகம் வராது என்பதாலும் இந்த மனிதவெடி குண்டு தாக்குதலுக்கு பெண்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)







பாகிஸ்தான் மறறும் ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பாரிய நிலநடுக்கத்தில் வீடுகள்,கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. கட்டட இடிபாடுகளையும் அதனுள் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.



## பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தானில் பாரிய நிலநடுக்கம்

# 350 பேர் பலி

**பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் கடந்த நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 350க்கும் மேற்பட்டோர் பலியாகினர். 1,400க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தியாவின் சில பகுதிகளையும் நிலநடுக்கம் தாக்கியுள்ளது.**

ஆப்கானிஸ்தானின் வட கிழக்கில் உள்ள படாக்ஷான் மாகாணம், ஜுர்ம் என்ற இடத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

பூமிக்கு கீழே 213.5 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

பாகிஸ்தானில் இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.7 அலகுகளாகப் பதிவானது. உள்ளூர் நேரப்படி பிற்பகல் 2.09 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலநடுக்கத்துக்கு 200 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத், கராச்சி, லாகூர், ராவல் பிண்டி, குவெட்டா, கோஹட், மலாகண்ட் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் இந்த நிலநடுக்கம் உணரப் பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்டதை உணர்ந்த பொதுமக்கள் அவர்கள் இருந்த கட்டடங்களிலிருந்து அச்சத்து டன வெளியேறி வீதிக்கு விரைந்த னர்.

பாகிஸ்தானில் மலைப்பாங்கான பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டது. அங்கு 228 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனால், பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணிகளில் மத்திய அரசு, மாகாண அரசுகள், இராணுவம் ஆகியவை ஈடுபட வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டார்.

நிலநடுக்கப் பகுதிகளில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (3-7)

## திமிங்கலத்தை பார்க்க சென்ற படகு கவிழ்ந்தது கனடாவில்

### 5 பேர் பலி; ஒருவரைக்காணவில்லை



கனடா நாட்டில் திமிங்கலத்தை பார்வையிட படகு ஒன்றில் சென்ற போது ஏற்பட்ட திடீர் விபத்தில் 5 பேர் பரிதாபமாக பலியாகியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.பிரித்தானிய கொலம் பியாவில் உள்ள வான்கூவர் தீவுக் கடலில் தான் இந்த கொடூர சம்பவ ம் நிக ழ்ந்துள்ளது.

டோபினோ நகருக்கு மேற்கில் அமைந்துள்ள இந்த தீவுக்கடலில் உலாவரும் திமிங்கலத்தை பார்க்க நூற்றுக்கணக்கானவர்கள் படகுகளில் பயணம் மேற்கொள்வது வழக்கம்.


இதுபோன்று ஒரு பயணம் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில், லெவைதன் என்ற படகில் 27 பேர் புறப்பட்டுள்ளனர்.

கரையிலிருந்து 8 மைல் தொலைவிற்கு சென்றவுடன், திடீரென படகு கவிழ தொடங்கியுள்ளது. ஆபத்தை உணர்ந்த பயணிகள் உடனடியாக மீட்புக்குழுவினருக்கு அவசர தக வல் அளித்துள்ளனர்.

தகவல் பெற்று 30 நிமிடங்களில் ஹெலிகொப்டர் மூலம் வந்த மீட்புக் குழுவினர், கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த 21 பேரையும் பத்திரமாக மீட்டனர்.

ஆனால், மீட்பு குழுவினர் வருவ தற்கு முன்னரே 5 பேர் பலியானதாகவும் ஒருபயணியை இதுவரை கண்டுபிடிக்கவில்லை என கடலோர காவற்படையினர் தெரிவித்துள்ளனர். (3-7)

# மனித உருவத்தில் காட்டேரி பராகுவே மக்கள் பயப்பீதியில்



பராகுவே பகுதியில் தண்ணீரில் அடித்து வரப்பட்டு கரை ஒதுங்கிய உருவம் இரத்த காட்டேரி போன்று இருப்பதாக கூறி அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

பராகுவே பகுதியில் தண்ணீரில் மிதந்து வந்த அந்த வித்தியாசமான உருவத்தை பார்த்த மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

சிதிலமடைந்த நிலையில் தண்ணீரில் அடித்துவரப்பட்டு கரை ஒதுங்கிய அந்த உருவம் இரத்த காட்டேரி போன்று இருப்பதாக பீதியடைந்துள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் சிலி, மெக்சிகோ பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் மிருகங்களை தாக்கி இரத்தம் குடித்து வந்த இரத்த காட்டேரி எனவும் சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.காமன்டெல்பாறன எனும பகுதியில் கரை ஒதுங்கியுள்ள சந்தேகத்துக்குரிய இந்த உருவத்திற்கு மனிதர்கள் போன்று கைகள் மற்றும் விரல்கள் இருப்பதாக கூறியுள்ள கிராம மக்கள், இது போன்ற உருவங்கள் அருகாமையில் உயிருடன் இருக்க வாய்ப்புள்ளதாக அச்சம் தெரிவித்துள்ளனர். (3-7)

## ஆர்ஜென்டீனா ஜனாதிபதி தேர்தலில் இழுபறி

தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனாவின் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடத்தப்பட்டது. அங்கு முதல் சுற்றுத் தேர்தலி லேயே ஜனாதிபதியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால், வெற்றி பெறுபவர் 45 சதவீத வாக்குகளோ அல்லது 10 சதவீத வாக்கு வித்தியாசத்துடன் 40 சதவீத வாக்குகளோ பெற்றிருக்க வேண்டும்.

இந்த நிலையில். ஜனாதிபதி தேர்தல் முடிந்த உடனேயே வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இதில் முதல் சுற்றிலேயே வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ஆளும் வெற்றிக் கூட்டணி வேட்பாளர் டேனியல் சியோலிக்கும், பழைமைவாத கட்சித் தலைவரும், பியூனோஸ் அயர்ஸ் நகர மேயருமான மவ்ரிசியோ மாக்ரிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. பெரும்பான்மை வாக்குகள் எண்ணி முடிக்க ப்பட்ட நிலையில், இருவரும் தலா 35 சதவீத வாக்குகளை பெற்று இருந்தனர். புதுப்பித்தல் கூட்டணியின் வேட்பாளர் செர்ஜியோ மாசா 21 சதவீத வாக்கு களும் பெற்றிருந்தார்.

மதுமுள்ள வாக்குகளை எண்ணி முடித்தாலும் கூட சியோலி வெற்றி பெறுவது சிரமம். எனவே அடுத்த மாதம் (நவம்பர்) 22ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்கு முதலிடம் பிடித்த சியோலி, மாக்ரி இடையே 2ஆவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் நடப்பது உறுதியாகி விட்டது.முதல் கட்டத்தேர்தல் முடிவுக ளை ஏற்றுக்கொள்வதாக சியோலி தெரிவித்துள்ளார். (3-7)

# இலங்கை அரசை காப்பாற்ற அமெரிக்க அதிகாரிகள் முயற்சி

## அம்பலப்படுத்துகிறார் பிரட் அடம்ஸ்



இலங்கை மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமெரிக்க அதிகாரிகள் பலர் எதிர்த்திருந்தனர். ஆனால் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரான றொபேட் ஓ பிளேக் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலராக பதவி உயர்த்தப்பட்ட பின்னர், இந்தத் தீர்மானத்தை உந்தித் தள்ளினார்.

இலங்கையின் முன்னாள் அரசாங்கம் நாட்டில் மீளிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான தனது அழுத்தத்தை அமெரிக்கா கைவிட்டிருக்கும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான நிறைவேற்று இயக்குனர் பிரட் அடம்ஸ், 'சண்டே ரைம்ஸ்' ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தில் வேறுபட்ட சக்திகள் செயற்படுகின்றன. 'அமெரிக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிலர் இலங்கை மீதான ஐ.நா தீர்மானத்தை வரவேற்கவில்லை. இவ்வாறானதொரு தீர்மானத்தை இவர்கள் விரும்பவில்லை.

இவர்கள் இத்தீர்மானம் தொடர்பாக இந்தியா என்ன நினைக்கிறது, சீனா என்ன நினைக்கிறது, இதில் சீனாவின் பங்கு எத்தகையது என்பது தொடர்பாக மட்டுமே கவலை கொள்கின்றனர்' என அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

'இலங்கை தொடர்பான பிரச்சினையைத் தமது நாடு சார்பாக நோக்காது சீனாவின் கோட்பாடுகளின் ஊடாக நோக்குகின்ற சிலர் அமெரிக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இது இலங்கையுடனான அமெரிக்காவின் உறவை பலவீனப்படுத்தாதா? அத்துடன் இது இலங்கையுடனான சீனாவின் உறவைப் பலப்படுத்துவதற்கான ஒரு காரணியாக அமையாதா?' என அடம்ஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்காவில் எடுக்கப்படும் முயற்சிகள் நேரத்தை விரயமாக்குவதாகவும் அமெரிக்க அதிகாரிகள் சிலர் கருதுகின்றனர். அமெரிக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அதிகாரிகள் மட்டுமே இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என விரும்புகின்றனர்.

'இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பொப் பிளேக் பொறுப்பாக உள்ளார். அவர் இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவராக முன்னர் பதவி வகித்திருந்தார். ராஜபக்ச அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்பதை இவர் விரும்பினார்' என அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான நிறைவேற்று இயக்குனர் அடம்ஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் மட்டுமல்லாது மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதிலும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பதை பிளேக் உணர்ந்து கொண்டார்.

மகிந்த ராஜபக்ச அரசாங்கமானது நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பணியைத் திறம்பட ஆற்றியிருந்தால், அமெரிக்காவும் நீதி தொடர்பில் தான் வழங்கிய அழுத்தத்தைக் கைவிட்டு, மீளிணக்கப்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் எனத் தான் கருதுவதாக அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

' உண்மையில் இலங்கையின் முன்னைய அரசாங்கம் இதயசுத்தியுடன் செயற்பட்டிருந்தால், இலங்கை அரசாங்கம் தனது நாட்டை முன்னேற்றுகிறது. சமூகங்களின் மத்தியில் உறவு நிலையைக் கட்டியெழுப்புவதற்காகப் பணியாற்றுகிறது. தமிழ் சமூகங்களுக்காக தனது முதலீட்டை மேற்கொள்கிறது. தமிழர் வாழிடங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுகிறது. தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கவில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கேற்ப அரசியல் நிறுவகங்களை இலங்கை அரசாங்கம் நிறுவுகிறது என அமெரிக்கா கூறியிருக்கும்' என அடம்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

'கடந்த காலம் கடந்த காலமாகவே இருக்கட்டும் என பொப் பிளேக்கும் அமெரிக்க அரசாங்கமும் கருதியிருக்கலாம். ஆனாலும் இலங்கை மீதான அமெரிக்கக் கோட்பாடு தொடர்பில் மாற்றம் செய்ய வேண்டும் என பிளேக் உணர்ந்து கொண்டார். இதுவே இவர் மீண்டும் தனது நிகழ்ச்சி நிரலில் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான வினாவை முன்வைக்க உதவியது.

இவர் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலராகப் பதவி உயர்த்தப்பட்ட போது கோட்பாட்டு மட்டத்தில் ஏதாவது காத்திரமான மாற்றங்களைச் செய்யவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதற்காக இவர் கடும்பிரயத்தனங்களை மேற்கொண்டார். ஆகவே இவை அனைத்தும் மிகவும் சிக்கலானவையாகும்' என அடம்ஸ் தனது நேர்காணலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தான் தன்னை நம்பியவர்களுக்கு துரோகம் இழைப்பது நல்லதல்ல எனவும் பிளேக் உணர்ந்து கொண்டார். ஆனால் அவர்கள் பிளேக்கிற்குத் துரோகம் இழைத்து விட்டார்கள் என நான் நினைக்கிறேன் எனவும் அடம்ஸ் தெரிவித்தார்.

இலங்கின் இறுதியுத்தம் தொடர்பான பேச்சுக்களில் 'வெள்ளைக் கொடி விவகாரம்' உண்மையில் இடம்பெறவில்லை என்ற விடயம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் முன்னைய அரசாங்கம் விடுதலை புலிகளின் தலைமையை முற்றாக அழித்த தன் மூலம் தாம் நாட்டிற்கு நல்லது செய்துவிட்டதாகவும், இதன்மூலம் தம்மால் இழைக்கப்பட்ட பல்வேறு மிகப்பயங்கரமான மீறல்களை முன்னைய அரசாங்கம் மூடிவிட முனைந்ததாகவும் அடம்ஸ் குறிப்பிட்டார்.

'தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதேபோன்று சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான விசாரணைகள் மூலமே உண்மையில் போரின் இறுதியில் என்ன நடந்தது என்பதை அறியமுடியும்' எனவும் அடம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

போரின் போது இடம்பெற்ற முக்கிய சில சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் முழு நாட்டையும் விசாரணைக்கு உட்படுத்த முடியாது. அதேபோன்று முழு இராணுவ வீரர்களையும் விசாரணைக்கு உட்படுத்துவதென்பது சுலபமானதல்ல. இதற்குப் பதிலாக மிக முக்கிய வழக்குகளை உடனடியாக விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு எதிராக தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைமையும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எமது கண்காணிப்பகத்திற்கு எதிராகவும் எனக்கு எதிராகவும் புலிகளிடமிருந்தும் புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்தும் பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. நாங்கள் 2008ன் பிற்பகுதியில் சிறிலங்காவில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக விமர்சிக்கத் தொடங்கினோம். அப்போது நாங்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்தோம்.

நாங்கள் புலிகளுக்கு எதிராக எமது விமர்சனங்களை முன்வைத்ததன் காரணமாக ராஜபக்சவின் அரசாங்கமானது மனித உரிமைகள் கண்காணிப்பகத்தையும் ஏனைய அமைப்புக்களையும் வரவேற்றது' என அடம்ஸ் தெரிவித்தார்.

'நாங்கள் புலிகளை விமர்சித்த போது இலங்கையின் தூதுவர்களும, அமைச்சர்களும் எம்மை வரவேற்றனர். இலங்கையின் அமைச்சரான மகிந்த சமரசிங்க என்னிடம் கலந்துரையாடியபோது நீங்கள் சிறப்பாக பணியாற்றுகிறீர்கள் என புகழ்ந்தார். அதற்காக என்னிடம் நன்றி தெரிவித்தார்.

ஆனால் அதே கோட்பாட்டை நாங்கள் தற்போது இலங்கை அரசாங்கத் தரப்பிற்குப் பயன்படுத்தும் போது அதனை அவர்கள் விரும்பவில்லை' எனவும் அடம்ஸ் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் மூன்று பத்தாண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தை நாங்கள் நோக்கும் போது இது உண்மையில் மிகப் பயங்கரமான ஒரு அரசியலாகக் காணப்படுகிறது. ஆகவே நாங்கள் இந்த விவகாரத்தை அரசியலாக்க விரும்பவில்லை, இதனை அரசியலாக்குவதே இலங்கை தான் என அடம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

'ஆனால் இது நாட்டைப் பிளவுபடுத்துகிறது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இந்தப் போர் மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பாக சில கருத்து வேறுபாடுகளும் நிலவுகின்றன். இந்த யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பில் பல வாதப் பிரதிவாதங்கள் நிலவுகின்றன. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை ராஜபக்ச அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்தது.

தாங்கள் 'பூச்சிய பொதுமக்கள் இழப்புக் கோட்பாட்டைப்' பின்பற்றியதாக பல ஆண்டுகளாக ராஜபக்ச அரசாங்கம் கூறிவந்துள்ளது. இது மிகவும் முட்டாள்தனமான ஒரு பதிலாகும். உண்மையில் இவர்கள் ஒரு பொறுப்புள்ள அரசாங்கமாக இருந்திருந்தால், யுத்தத்தின் போது பல்வேறு இழப்புக்கள் ஏற்பட்டன என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள்' எனவும் அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்று இயக்குனர் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

'புலிகளின் தலைமையானது போர் மிகவும் மோசமடைந்திருந்த காலத்தில் அனைத்து நம்பிக்கைகளையும் இழந்தது. இவர்கள் செயற்பாடுகளால் இவர்களது அரசியற் கோரிக்கைகளையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவர்கள் தமது கருத்துக்களை மட்டும் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மூளைச்சலவையில் ஈடுபட்டனர்' எனவும் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட அனைவரது பிரச்சினைகளையும் முன்வைப்பதற்கான பொருத்தமான பொறிமுறை இலங்கையில் இன்னமும் உருவாக்கப்படவில்லை என அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார். தமது நாடுகளில் இடம்பெற்ற தவறுகளைப் பொறுப்பெடுத்து, அதற்காக நட்டஈடுகளை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கும் செயற்பாடுகளை பல நாடுகள் மேற்கொண்டுள்ளன.

இவற்றை எடுத்துக்காட்டாக கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 'வெற்றியாளர்களுக்கான நீதி' மட்டுமே வழங்கப்பட்டது. போர் முடிவடைந்ததன் பின்னர் இந்த நிலை மிகவும் மோசமடைந்தது. போரை வென்றெடுத்த தரப்பினர் மட்டுமே நாட்டில் போற்றிப் புகழப்பட்டனர்.

'நீதி நடவடிக்கையானது பல்வேறு கதைகளை வெளிக்கொணர்வதற்கான வழியை உருவாக்கும். இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான தேவையைப் புரிந்து கொண்டுள்ளது போல் தெரிகிறது. ஆகவே இது வெற்றியாளரிற்கான நீதி மட்டுமல்ல. இது அனைத்து சமூகங்களுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியாகும்' என அடம்ஸ் தனது நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

# போரில் பாதிக்கப்பட்டோருடன் அரசு கலந்துரையாட வேண்டும்

## பொறுப்புக்கூறலில் இது முக்கியம் என்கிறார் பாக்கியசோதி

(கொழும்பு)

**நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் போரில் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடலொன்றை அரசு மேற்கொள்ளவேண்டும் என மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து யோசனை தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் விடயம் தொடர்பில் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி, அனைத்துக் கட்சிகளினதும் அபிப்பிராயங்களை அரசு உள்வாங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை இந்த மாநாடு இடம்பெற்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பாக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளும் தமது யோசனைகளை எழுத்து மூலம் முன்வைக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில், சர்வகட்சி மாநாடுகளை நடத்த அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளை உள்வாங்குவதற்கு மேலாக, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் விடயத்தில் பொது கலந்துரையாடலொன்றை முன்னெடுக்கவேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பினருடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவேண்டும் என்று பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகள், சமயத் தலைவர்கள், இலங்கை வாழ் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையைச் சார்ந்த புத்திஜீவிகள் ஆகியோரின் கருத்துகளை உள்வாங்கிக் கொள்வதற்காக மூன்று வகையான மாநாடுகளை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார். இதற்கமைய சர்வகட்சி மாநாட்டை அண்மையில் கூட்டி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

இந்நிலையிலேயே, போரில் பாதிக்கப்பட்ட தரப்பினரான (வடக்கு, கிழக்கு) மக்களிடம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# தற்போது ஒருசில பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன

## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு



ஒரு சில பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளதனை ஒப்புக்கொள்வதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய பொருட்கள் பலவற்றின் விலைகளை இந்த அரசாங்கம் குறைத்துள்ளது.

எரிபொருட்களின் விலைகளை குறைத்துள்ளது. அரச ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. அரசாங்கம் வழங்கிய சலுகைகள், நிவாரணங்களை மக்கள் அனுபவிக்கின்றனர்.

தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பளங்களை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் கல்வி முறைமை சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்.

கல்வியின் ஊடாக நாட்டின் எதிர்காலத்தையே மாற்றிவிட முடியும். கல்வி அமைச்சுப் பொறுப்பு மிகவும் பாரதூரமான கடமைகளை உள்ளடக்கியது.

தொழில்களை செய்யக் கூடிய வகையிலும் நாட்டின் கல்வி முறைமையில் மாற்றம் செய்யப்படும்.

நாட்டின் பணத்தை விரயமாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளனர் என அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# அரசியல் பழிவாங்கலால் ஓரங்கட்டப்பட்ட இராணுவத்தினர் மீள சேவையில் சேர்ப்பு!

## அதிகாரிகளிடம் உறுதியளித்தார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

மகிந்த ஆட்சியின்போது அரசியல் அழுத்தங்கள் காரணமாக திட்டமிட்ட அடிப்படையில் சேவையிலிருந்து வெளியேற்றப்பட்ட இராணுவத்தினருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதன் ஓர் அங்கமாக அரசியல் பழிவாங்கலுக்குள்ளான 15 இராணுவ அதிகாரிகளை இராணுவத் தலைமையகத்துக்கு அழைத்து நேற்று பேச்சு நடத்தினார்.

சந்திப்பில் கலந்துகொண்ட அதிகாரிகளை மீண்டும் இராணுவ சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன்போது இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர உறுதிப்படுத்தியுள்ளார். இனிவரும் நாட்களிலும் இவ்வாறான சந்திப்புகள் இடம்பெறவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

மகிந்த ஆட்சியின் போது, முன்னாள் இராணுவத் தளபதிக்கு நெருக்கமாகச் செயற்பட்ட படை அதிகாரிகள் சிலர் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பாக். பிரஜைகள் மூன்று பேர் கைது

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாகிஸ்தான் பிரஜைகள் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டி, பொல்ஹேன்கொடை பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம், சட்ட ரீதியான விசா இன்றி வாடகை வீடொன்றில் தங்கியிருந்த போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் மற்றும் மகன் ஆகிய மூவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நாளைய தினம் வரை அவர்களை மிரிஹான இடைநிலை முகாமில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மனநிறைவு

ஓர் ஊரிலே ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பது அவரது விருப்பமாக இருந்தது. தானே அதற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்று அவர் நினைத்தார். ஆதலால் அரண்மனையைச் சுற்றி மரங்களை நட்டார்.

இதைப் பார்த்த மக்களும் தங்கள் வீடுகளிலும் மரக்கன்றுகளை நிறைய நட்டு வளர்த்தார்கள். அதனால் சிறிது காலத்தினுள் அவ்வூரே பசுமையாக மாறிவிட்டது.

ஒருநாள் ராஜா தனது அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதம் விதமான மரங்களையெல்லாம் சென்று பார்த்தார். எந்தவொரு மரமும் சந்தோசமாக இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு மரத்திற்கும் ஏதோவொரு வகையில் குறை இருந்தது கண்டறியப்பட்டது.

முதலில் அரசர் ஆலமரத்திடம் சென்றார். அது கூறியது... மன்னா நான் நன்றாகப் பெரிய மரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன்... நாலாபுறமும் கிளைகளைப் பரப்பி நன்றாகப் படர்ந்து தான் இருக்கிறேன். இருந்தாலும் என்ன பிரயோசனம்? எனது பழம் மிகவும் சிறியதாக இருக்கிறது. என் கண்ணுக்கே அவை புலப்படமாட்டாது இருக்கிறதே. எனக்குப் பெரிய அவமானமாக இருக்கிறது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாமா என்று பார்க்கிறேன் என்று ஆலமரம் புலம்பியது.

அப்படியே ராஜா அடுத்தபடியாக ஓர் அத்திமரத்திடம் சென்றார். அதுவும் புலம்ப ஆரம்பித்துவிட்டது.

பழம் அழகாக இருக்கிறது... இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே. அத்திப் பழத்தைப் பிரித்துப் பார்த்தால்... அத்தனையும் சொத்தை என்று ஒரு பழமொழியே உண்டாக்கிவிட்டதே... இப்படி ஒரு கெட்ட பெயரோடுதான் இருக்க வேண்டுமா என்று வினவியது.

சரி இருக்கட்டும்... என்று கூறிவிட்டு வேப்பமரத்திடம் சென்றார். எனக்கு எவ்வளவோ மருத்துவக்குணங்கள் எல்லாம் இருப்பதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இருந்தாலும் என்ன பயன்? என்னுடைய பழத்தை மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லையே என்று தெரிவித்தது.

ராஜா அடுத்தபடியாக ஒரு பனை மரத்திடம் சென்றார்.

நான் நன்றாக உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். ஏனை மரங்கள் எல்லாம் என்னை அண்ணார்ந்துதான் பார்க்க வேண்டும்... இருந்தாலும் என்னிடம் நிழலுக்கு யாருமே வந்து ஒதுங்குவதில்லையே என்று கூறி அது அலுத்துக்கொண்டது.

அடுத்தபடியாக ராஜா ஓக் மரத்திடம் சென்றார்.

ஓக் மரம் சொல்லியது. இலையுதிர் காலத்தில் என் மீதுள்ள எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. முடிகொட்டிய மனிதர்களைப்போல மொட்டையாக நான் நிற்க வேண்டியுள்ளது... என்ன வாழ்க்கை இது? எல்லாம் என் தலையெழுத்து? என்று கூறியது.

ராஜா யோசித்தார்... என்ன இது? மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே மரங்கள்தான் காரணம். அவைகளால்தான் பூமியே செழிப்பாக இருக்கிறது. வீடுகட்ட, தளபாடங்கள் செய்ய மரங்கள் உபயோகப்படுகின்றன என்று தன்னகத்தே நினைத்தார்.

அப்போது அவ்விடத்தில் நின்ற ஒரு மகிழமரம் அவர் கண்ணில் தென்பட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் காட்சியளித்தது.

இது கூறியது மன்னா... இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ... வேப்பமரத்தையோகூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே... அதுவே எனக்கு மகிழ்ச்சி... அதுவே எனக்கு பூரண திருப்தி என்றது மகிழ மரம்.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள்... அது காய்ந்து மணம் வீசும். மகிழமரம் போல மனத்திருப்தியுடன் வாழ்வதற்கு மனிதர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

# தமிழ் சினிமா வரலாறு

39

## சின்னப்பாவின் காதல் மனைவி சகுந்தலாவின் "சோகக் கதை"

...1942 இல் வெளிவந்த பிருதிவிராஜன் என்ற படத்தில் சின்னப்பா பிருதிவிராஜனாகவும் ஏ.சகுந்தலா சம்யுக்தையாகவும் நடித்தனர்.

(ஏ.சகுந்தலா நல்ல அழகி. எம்.எஸ். சுப்புலட்சுமி நடத்த சகுந்தலை படத்தில் தோழிகளில் ஒருவராக நடித்தவர்)

சின்னப்பாவுக்கும் சகுந்தலாவுக்கும் காதல் ஏற்பட்டது.

சம்யுக்தையை பிருதிவிராஜன் குதிரையில் தூக்கிச் சென்றது போல் சகுந்தலாவை சின்னப்பா காரில் கூட்டிச் சென்று திருமணம் செய்துகொண்டார். இவர்களின் பதிவுத் திருமணம் 5-7-44 இல் நடைபெற்றது.

திருமணத்திற்குப் பிறகு சகுந்தலா படங்களில் நடிக்கவில்லை.

இந்த காதல் தம்பதிகளுக்கு ஒரே மகன். பெயர் ராஜாபகதூர்.

**சொத்துக்கள் எங்கே?**

சின்னப்பாவுக்கு நிறைய சொத்துக்கள் இருந்தபோதிலும் அவர் திடீர் என்று இறந்துவிட்டதால் பெரும்பாலான சொத்துக்கள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

எனினும் சென்னை திருவல்லிக்கேணியில் 13 வீடுகள் கொண்ட ஒரு இடம் (காம்பளக்ஸ்) சகுந்தலாவிடம் இருந்தது. ஒரு வீட்டில் தன் மகனுடன் வசித்துக்கொண்டு மீது வீடுகளின் வாடகை வருமானத்தின் மூலம் குடும்பத்தை நடத்தி வந்தார்.

**நடிகர் ஆனார்**

ராஜாபகதூருக்கு 10 வயதான போது சாண்டோ சின்னப்பதேவர் தயாரித்த வாழ வைத்த தெய்வம் என்ற படத்தில், கண்ணாம்பாவின் மகனாக (ஜெமினி கணேசனின் தம்பியாக) நடித்தார்.



மனைவி ஏ.சகுந்தலாவுடன் சின்னப்பா

பின்னர், கோவில் புறா என்ற படத்தில் குணச்சித்திர வேடத்தில், நாதசுரவித்வானாக நடித்தார். சிவாஜிகணேசன் நடித்த தியாகி, ராமராஜன் நடித்த கரகாட்டக்காரன் உட்பட பல படங்களில் வில்லனாக நடித்தார். அதன்பின் நடிகர்களுக்கு குரல் கொடுத்தார்.

தன் அத்தையின் (சின்னப்பாவின் சகோதரி) மகள்கள் இருவரையும் மணந்து கொண்டார்.

**சிறிய வீட்டில்**

நாளடைவில், திருவல்லிக்கேணியில் இருந்த 13 வீடுகளையும் விற்றுவிட்டு சின்மயா நகரில் ஒரு சிறு வீட்டில் சகுந்தலா குடியேற நேரிட்டது.

அவர் பத்திரமாகக் காப்பாற்றி வந்த ஒரே ஒரு சொத்து சின்னப்பாவின் புகைப்படம்தான். மழை பெய்யும்போது வீடு ஒழுகும். படம் நனைந்து விடக்கூடாது என்று ஒரு தகரப்பெட்டியில் படத்தை மூடி வைத்துவிடுவார்.

தமிழ்ப்பட உலகின் இரண்டாவது சூப்பர் ஸ்டாரின் அழகு மனைவி கடைசி காலத்தில் வறுமையில் உழன்று ஒருநாள் காலமானார்.

வாழ்க்கையில் சந்தித்த துயரங்களில் விரக்தி அடைந்த மகன் ராஜாபகதூர், துயரத்தை மறக்க குடிக்கத் தொடங்கி, இறுதியில் மதுவுக்கு அடிமையானார். உடல் நலம் சீர்கேடு அடைந்து திடீரென்று மரணம் அடைந்தார்.



புதுக்கோட்டையில் உள்ள பி.யு.சின்னப்பாவின் சமாதி




சின்னப்பா சமாதியில் உள்ள கல்வெட்டு

இதுபற்றி பட அதிபர் ஒருவர் கூறுகையில் சினிமா உலகில் பெயரும் புகழும் பெற்று விளங்கியவர்களில் முக்கால்வாசி பேர் கடைசி காலத்தை வறுமையில்தான் கழித்திருக்கிறார்கள். இது ஒரு சாபக்கேடு. சின்னப்பா சிக்கனமாக வாழ்ந்தார். ஏராளமான வீடுகள் வாங்கினார். ஆனால் இளம் வயதிலேயே மரணம் அடைந்தார். அவருடைய மனைவியும் ஒரே மகனும் வறுமையில் வாட நேர்ந்ததை விதி என்றுதான் கூறவேண்டும் என்றார். *(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 307

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...இவையெல்லாம் நாம் கடவுளின் மீது பிரதிபலிக்கும் நமது சொந்த நெறிப்படுத்தல்கள்.

இவையெல்லாம் நமக்கு சிறு வயதிலிருந்தே சமூகம் கற்றுத் தந்தது.

நன்றியுணர்வு என்னும் கருத்தே நம்மிடையே மிகவும் திரிக்கப்பட்டு விட்டது.

நன்றியுணர்வு என்பது நாம் ஏதாவது ஆழமான தொல்லையிலிருந்து மீட்கப்பட்டாலோ அல்லது யாராவது ஒருவர் தனது அக்கறையிலும் பகிர்தலிலும் வழக்கத்திற்கு மாறாக விசேடமாக நடந்துகொண்டாலோ உணரப்பட வேண்டியது என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

இது நமக்குக் கற்றுத் தரப்பட்ட மிகவும் சிறுபிள்ளைத்தனமான ஒரு நம்பிக்கை.

நான் சொல்கிறேன்.. கோயிலுக்குள் வெறுமனே ஒரு நன்றியுணர்வுடன் நுழையுங்கள்.

ஒவ்வொரு தெய்வத்தின் முன்பும் சில நிமிடங்கள் ஒரு ஆழமான நன்றியுணர்வுடன் நில்லுங்கள்.


பிறகு கோயிலை விட்டு அதே மனநிலையுடன் செல்லுங்கள்.

அதுவே போதுமானது.

மற்றவை தானாகவே கவனித்துக் கொள்ளப்படும்.

இதுவே இறுதியான உயர்ந்த பிரார்த்தனை.

நன்றியுணர்வே இறுதியான, உயர்ந்த பூஜை அல்லது சமர்ப்பணம்.



நீங்கள் இங்கிருக்கும் சில நாட்களில் நான் சொல்வதை அனுபவ பூர்வமாக உணர, அவற்றை பயனுள்ள வகையில் உபயோகியுங்கள்.

நீங்கள் வெளியுலகிலிருந்து விலகியிருக்கும் இந்த ஏழு நாட்களில் நன்றியுணர்வு உங்களிடம் வேர்விட அனுமதியுங்கள்.

நீங்கள் திறந்து உங்களை மலர அனுமதியுங்கள். இது உங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்.

நீங்கள் உருமாற்றமடைவதற்கான ஒரு வாய்ப்பு, தவற விட்டு விடாதீர்கள். உங்களுக்குள் ஒரு வெற்றிடத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் இவ்விடத்தை விட்டுச் செல்லும் பொழுது அதுவும் உங்களுடன் வரும்.

பாருங்கள், பிரச்சினை என்னவென்றால் நாம் எப்பொழுதும் நமது தலையின் (அறிவின்) வழியாகவே கடவுளை அடைய முற்படுகின்றோம்.

உங்களால் ஒருபோதும் உங்கள் தலையின் வழியாகக் கடவுளை அடைய முடியாது.

நீங்கள் வெறுமனே உங்கள் தலையை விட்டுவிட்டால் தானாகவே இதயத்தின் (உணர்வின்) வழியாக இயங்க ஆரம்பித்து விடுவீர்கள்.

பிறகு அவரை அடையக்கூட வேண்டாம்- அவர் ஏற்கனவே உங்களுள்தான் இருக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பீர்கள்!

உங்கள் தலையைக் கொண்டு நீங்கள் எப்பொழுதும் வெளியேதான் தேடுவீர்கள். ஒருபோதும் உங்களால் கடவுளை வெளியே கண்டுபிடிக்க முடியாது. *(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

# 25 வயதுக்கு மேற்பட்டோருக்கே ஆட்டோ சாரதி அனுமதிப் பத்திரம்

## ஜனாதிபதியிடம் பரிந்துரை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே ஆட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் வழுங்கப்பட வேண்டுமென சட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டும் என தேசிய அபாயகர ஓளடத கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் டாக்டர் சமீர நிலங்க சமரசிங்க தமது பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளார்.

3 ஆயிரத்து 500 ஆட்டோ சாரதிகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் 10 வீதமானவர்கள் தாம் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவதை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த ஆய்வின் பிரகாரம் 18 வயதை அடைந்துள்ள பெரும்பாலான இளைஞர்கள் தொழில் வாயப்பின்மை காரணமாக ஆட்டோ சாரதிகளாக தொழில் செய்கிறார்கள். இவர்கள் போக்குவரத்து விதிகளைக் கூட தெரியாத நிலையில் உள்ளனர். அத்துடன் இவர்கள் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட இலகுவாகப் தூண்டப்படுகிறார்கள்.

இலங்கையில் ஒரு மில்லியன் ஆட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் 5 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் ஆட்டோவை பயன்படுத்துகின்றார்கள். (3)

# காணி ஒதுக்கீட்டில் மோசடி மதவாச்சியில் ஆர்ப்பாட்டம்



மதவாச்சி நாவற்குளம் பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஏ-9 வீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

மீள்குடியேற்றத்துக்கென ஒதுக்கப்பட்ட காணி தொடர்பில் இடம் பெற்ற மோசடிகளை நிறுத்துமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தமது கிராமத்தில் 15 வருடங்களாகவசிக்கும்சிலர் அரசியல்வாதி ஒருவரின் ஆசீர்வாதத்துடன் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. ஆனால் அரசியல்தலையீடு காரணமாக அவர்களது ஆதரவாளர்களுக்கு வளம்மிக்க நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் அரசியல் செல்வாக்குள்ள சிலர் மூன்று தண்ணீர் தாங்கிகளை அமைக்கின்றனர். இதில் ஒன்று கடந்த டிசெம்பர் மாதம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் பழுதடைந்த மூன்று தண்ணீர் தாங்கிகள் புனர்நிர்மாணம் செய்யப்படவில்லை.

புதிதாக அமைக்கப்பட்ட தாங்கியும் ஒரு மாதத்தின் பின்னர் பலத்த மழைகாரணமாகபழுதடைந்துவிட்டது.

இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டபோது 19இலட்சத்து 50ஆயிரம் ரூபா கைமாறப்பட்டுள்ளமை தொடர்பாக கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு பழுதடைந்த நீர்தாங்கியை புனர்நிர்மாணம் செய்து தர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த விவசாய சேவைகள் உதவி ஆணையாளர் அவ்வாறான மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பது விசாரணைகளில் தெரியவந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ளார். (3)

## கடவுச்சீட்டு கிடைத்தவுடன்

# விமல் வீரவன்ச திட்டமிட்டவாறு ஐரோப்பா விஜயம் செய்வாராம்

கடவுச்சீட்டு கிடைத்தால் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச திட்டமிட்டவாறு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்வார் என கட்சியின் பேச்சாளர் மொஹமட் முஸம் மில் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடவுச்சீட்டை அதிகாரிகள் திட்டமிட்டவாறு கட்சியின் தலைவர் விமல் பயணத்தை மேற்கொள்வார்.

ஜெனீவா தீர்மானத்தினால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை தெளிவுபடுத்தும் நோக்கல் கருத்தரங்குகளை நடத தவே விமல் வீரவன்ச ஐரோப்பா விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தார்.

வெளிநாடுகளில் வாழ் ந்து வரும் இலங்கையர்க ளும், தேசிய சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகளும் இந்த கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

இத்தாலி, பிரான்ஸ், பிரி ட்டன் உள்ளிட்ட சில நாடுக ளில் இந்த கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. இந்த மாதம் 25ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரையில பத்து நகரங்களில் கருத்தரங்குகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த கருத்தரங்கினை குழப்ப சில தரப்பினர் முயற் சித்து வந்தமை தெளிவா கியுள்ளது என முஸம் மில் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வியாபாரிகள் பாதிப்பு

(கரணவாய்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நெல்லியடி நகரப்பகுதியில் அதிகரித்துள்ள தென்னிலங்கை வியாபாரிகளால் நெல்லியடி நகரப் பகுதி உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி நகரப் பகுதியெங்கும் தென்னிலங்கை வியாபாரிக்ளின் நடைபாதை வியாபாரம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் பொருட்களை கொள்வனவு செய்யும் பொதுமக்களும் தென்னிலங்கை வியாபாரிகளிடமிருந்தே தேவையான பொருட்களை பெற்றுக் கொள்கின்றனர்.

இதனால் உள்ளூர் வியாபாரிகளது வியாபார நடவடிக்கைகள் வெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-5-60)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 528

சிறி துவாரகன்




வின்யாக்ஷன்




சயன் சயந்தன்




ராமஜெயம்




சர்மி சர்மிலா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொடரும் மழையால் மட்டு. மக்கள் அவதி

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பல பகுதிகளில் பாரிய சேதங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளும் பாதிப்புக்குள்ளாகியுளளன. அந்தவகையில் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தின் புளியடி வீதியில் அமைந்துள்ள பாலம் ஒன்று தொடர் மழை காரணமாக முற்றாக சேதம் அடைந்துள்ளது. இதனால் அவ்வழியால் மக்கள் எவரும் பயணிக்க முடியாத நிலையில் உள்ளனர்.**



கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் ஆகியோர் சேதமுற்ற பாலத்தினை குறித்த வவுணதீவு பிரதேச சபைச் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.சித்திரவேல் சகிதம் சென்று பார்வையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய அதிகாரிகளுடன் தொலைபேசி மூலமும் கலந்துரையாடினர்.

இப்பகுதி வெள்ள அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படும் பகுதி அவ்வாறான காலத்தில் மக்கள் இவ்வீதியினையே பயன்படுத்துவர். ஆனால் தற்போது இவ்வீதியின் பாலம் முற்றாக சேதமடைந்துள்ளமையால் மேலும் அம் மக்களின் இயல்பு போக்குவரத்து பாதிக்கப்படும். ஆகையால் மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் சேர்ந்து விரைவில் இப்பாலத்தினை அமைக்க ஆவன செய்து தர வேணடும்என மக்கள்வேண்டுகோள விடுத்துள்ளனர்.

இதேவேளை மாவட்டத்தில் கடந்த சில திணங்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப பெருக்கினால் கிரான் - தொப்பிகல பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

வெள்ளப் பெருக்கு காரணமாக கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் புலிபாந்தகல் மறறும் தொப்பிகல பிரதேசங்களை அண்மித்த கிராமங்களுக்கான தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப் பட்டுள்ளது. இதையடுத்து முதல் படகுச் சேவை ஆரம்பக்கப்பட்டுள்ளது.

கோறளைப் பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகம் மற்றும் இராணுவத்தினரினால் இரு படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுளளன. (இ-7-10)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாற்று நிகழ்ச்சித்திட்டம் விரைவில்

பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நிறுத்திய கல்வி அமைச்சு, அதற்குப் பதிலாக இவ்வருடம் முதல் பல்கலைக்கழக மட்டத்தில் மாற்று நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்த தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் சகல மாணவர்களுக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் கட்டாயமாகும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் திறன்களையும், உடல் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்யும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் அமையவுள்ளதாகவும் இவ்வருடம் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் மாணவர்கள் இந்த நிகழ்ச்சித திட்டத்துக்குள் உள்வாங்கப்டுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி இன்று

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி குழந்தை இயேசு முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி-2015 இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி முன்பள்ளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஈ.சி.டி. கல்வி நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன், கரவெட்டி எஸ்.ரி.அந்தோனிஸ், தேவாலய பங்குத் தந்தை எவ்.ஆர்.ஏ. அமலராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

## மகிந்தவின் மாளிகை குறித்து பிரசன்ன ரணதுங்க கண்டனம்



ஜனாதிபதி மாளிகையின் நிலக்கீழ் அதிசொகுசு மாளிகை தொடர்பில் தகவல் வெளியிட்டு அதில் அரசியல் அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதற்கு கடுமையான கண்டனம் வெளியிடுவதாக கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை, உடுகம்பொல ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இந்த தகவல்களை வெளியிடுவதன் மூலம் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பெரிய அளவிலான பாதிப்பேற்படுவதனை தவிர வேறு நன்மைகள் ஒன்று ஏற்படப் போவதில்லை.

ஜனாதிபதி தேர்தலின் போது ஒன்றிணைந்த ரணில் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மேலும் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இந்த தகவல்கள் வெளியிடப்படுகின்றதா என ஒரு சந்தேகம் எழும்புகின்றது.

பாதுகாப்பு உத்திகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையின் நிலக்கீழ் அதிசொகுசு மாளிகையை, அதிக பயங்கரமான தீவரவாதிகளின் மாளிகையினை கண்டுபிடித்ததனை போன்று அரசாங்கம் பிரசித்திபடுத்துகின்றது.

இந்த மாளிகை தொடர்பில் தகவல் வெளியிடுவதன் மூலம் தேசிய பாதுகாப்பிற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்படவுள்ளது. இந்த அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும்.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பிறகு போலியான தகவல்களை பரப்புகினறார்கள்.

எங்கள் மக்களும் இந்த பொய்களில் சிக்கிக் கொணடார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## நவம்பர் மாதம் 8 ஆம் திகதி தகவல்தொழில்நுட்ப பரீட்சை

பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 12 மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட (GIT) பரீட்சை எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரு இலட்சத்து 56 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் இவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு தபாலிடப்பட்டுள்ள தாகவும்திணைக்களம்மேலும் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் 011 278 4208, 011 278 4537 எனும் தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்பு கொள்ளுமாறும திணைக்களம் கேட்டுள்ளது. (இ-7-10)



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மூன்றாம் வருட முதலாம் அரையாண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டின் நிமிர்த்தம் இருபாலையிலுள்ள கானான் சிறுவர் இல்லம் ஒன்றுக்கு அண்மையில் சென்றிருந்த போது...

## வேலைதேடும் இளைஞர்களுக்கான கூட்டம் வேலணையில் நடைபெறும்

London Course of Business Technology நிறுவனத்தின் ஏற்பாட்டில் வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேலை தேடும் இளைஞர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே வேலை தேடும் இளைஞர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமக்குரிய வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் படித்து விட்டு வேலை வாய்புகளை தேடும் இளைஞர்களுக்கு அவுஸ்திரேலியா நிறுவன நிதி உதவியுடன் 3 மாத கால பயிற்சியும் அதனைத் தொடர்ந்து வேலை வாய்ப்பை யும் பெற்றுக்கொள்ள முடியும் என வேலணை பிரதேச செய லர் அறிவித்துள்ளார். (இ-5)

# இலங்கையின் ஆணவத்தை இந்தியா அடக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து

**இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை கைது செய்து 15 கோடி ரூபா வரை அபராதம் விதிக்க முடிவு செய்திருப்பதாக இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது. இலங்கை அரசின் இந்த முடிவு அதன் ஆணவப் போக்கையே காட்டுகிறது. இது கண்டிக்கத் தக்கது என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**



அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் வங்கக் கடலில் மீன் பிடிக்கும் போது இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது, கொடூரமாக தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது ஆகியவை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை 800இற்கும் அதிகமான தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாகியிருக்கின்றனர். உலக அளவில் கடைப்பிடிக்கப்படும் மரபுகளின் படி பார்த்தால், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்று மீன் பிடிப்பதாக கூறுவதே அபத்தமாகும்.

குறுகிய கடல் எல்லை கொண்ட பகுதிகளில் ஒரு நாட்டு மீனவர்கள் இன்னொரு நாட்டின் எல்லைக்குச் சென்று மீன் பிடிப்பது அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், நாடுகளின் கடல் எல்லை தெளிவாக வரையறுக்கப்படுவதற்கு முன்பாகவே காலம் காலமாக மீன் பிடித்து வரும் மீனவர்களின் உரிமையை புதிதாக வரையறுக்கப்படும் எல்லைகளால் பறிக்க முடியாது. இதை சர்வதேச நீதிமன்றங்கள் பல முறை உறுதி செய்திருக்கின்றன.

இத்தகைய சூழலில், தமிழக மீனவர்களுக்கு கோடிக்கணக்கில் அபராதம் விதிக்கப்போவதாக இலங்கை அரசு கூறுவது இந்தியாவை சீண்டிப் பார்க்கும் செயலாகும். மீனவர்கள் பிரச்சினையில் இந்தியாவை இலங்கை சீண்டுவது இது முதல் முறையல்ல.

இலங்கை அரசின் புதிய முடிவு சட்டமாக்கப்பட்டால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாக பறிக்கப்படும். அதுமட்டுமின்றி, இலங்கை அரசின் மிரட்டல் போக்கை இனியும் அனுமதிக்கக்கூடாது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட போதும், தாக்கப்பட்ட போதும் அது குறித்து இராமேஸ்வரம் பகுதி பொலிஸ் நிலையங்களில் மீனவர்கள் முறைப்பாடு அளித்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் அடையாளம் தெரியாத இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட கடற்படை வீரர்களையும், அவர்களின் தளபதிகளையும் கைது செய்து ஒப்படைக்கும்படி இண்டர்போல் (INTERPOL) மூலம் இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

மேலும், தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாக்கவும், இலங்கை அரசை அடக்கவும் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 280 | 300 | 350 |
| தக்காளி | 120 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 40 | 50 |
| கோவா | 100 | 60 | 120 | 100 |
| கரட் | 80 | 60 | 160 | 70 |
| பூசணி | 50 | 50 | 60 | 40 |
| புடோல் | 80 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 160 | 120 |
| பாகற்காய் | 180 | 250 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 160 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 50 | 20 | 60 | 50 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 160 | 150 |
| போஞ்சி | 180 | 250 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 40 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 40 | 10 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 400 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | – | – |
| வெங்காயப்பூ | 180 | 150 | 200 | 200 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 25 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பறிப்பு 20



இலங்கையில் ஆறுகள் அதிகம். படகுகள் மூலம் போக்குவரத்து நடைபெறுகிறது

### விசாரணைக்குழு

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள் நசுக்கப்படுவதாக இங்கிலாந்து அரசாங்கத்துக்குப் புகார்கள் அனுப்பப்பட்டன.

அதனால் இதுபற்றி விசாரித்து ஆலோசனைகள் தெரிவிக்க பல்வேறு குழுக்களை (கமிஷன்) இங்கிலாந்து அரசு அமைத்தது.

ஆனால் சிங்களத் தலைவர்களின் எதிர்ப்பினால் அக்குழுக்களால் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

தமிழர்கள் வாழும் பகுதிக்கு மாகாண சுயாட்சி வழங்கலாமா என்று இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் ஆலோசிக்கப்பட்டது.

அதற்குப் பண்டாரநாயகா (சந்திரிகாவின் தந்தை) ஆதரவு தெரிவித்தார். ஆனால் இடைக்கால பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா எதிர்த்தார்.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பாக இலங்கையின் நிர்வாகச் சீர்திருத்தம் குறித்து ஆலோசனை கூற பல்வேறு குழுக்கள் (கமிஷன்கள்) அமைக்கப்பட்டன. அதில் சோல்பரி குழு முக்கியமானது. இது 1944 இல் அமைக்கப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஜி.ஜி.பொன்னம்பலம், இலங்கை பாராளுமன்றத்தில் சிங்களருக்கு 50 சதவீதமும், தமிழருக்கு 50 சதவீதமும் (இரு சமுதாயத்தினருக்கும் சரி சமமான இடங்கள்) ஒதுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1944 நவம்பர் 27 ஆம் திகதி கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கூறியதாவது:-

தமிழர்கள்தான் இந்த நாட்டின் ஆதிகுடிகள். இதை நம் நண்பர்களாகிய சிங்களர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரை தமிழர்கள் ஆட்சி செய்தனர். இதனை இலங்கை வரலாற்றில் காணலாம்.

ஐரோப்பியர்கள் வரும் வரை எந்த அந்நியராலும் தமிழர்கள் ஆட்சி செய்யப்படவில்லை. நம்மை நாமே ஆண்டு வந்திருக்கிறோம்.

இவ்வாறு ஜி.ஜி.பொன்னம்பலம் கூறினார்.

### கம்யூனிஸ்டுகள்

தமிழர்களின் கோரிக்கைக்கு இலங்கை கம்யூனிஸ்டு கட்சியும் ஆதரவாக இருந்தது.

இலங்கை கம்யூனிஸ்டு கட்சியின் மே தின அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

தமிழர்கள், தனித்துவம் பெற்ற தேசிய இனமாகும். இலங்கையின் வடக்கு, கிழக்குப்பகுதிகள் அவர்களின் பாரம்பரிய தாயகம்.

இதை ஆளவும் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கவும் தமிழ் இனத்துக்கு உரிமை உண்டு.

அவசியமானால் அவர்கள் தனியாகப்பிரிந்து தங்களுக்கென்று தனியாக ஆட்சி அமைத்துக்கொள்ள உரிமை பெற்றவர்கள்.

இவ்வாறு கம்யூனிஸ்டு கட்சி கூறியது.

### சிங்களர்கள் கருத்து

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். சிங்களப் பொது மக்களில் பெரும்பான்மையோர் தமிழர்களிடம் நட்புடன்தான் இருந்தனர். தமிழர்- சிங்களர் இடையே காதல் திருமணங்கள் கூட நடந்துள்ளன.

சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள வெறியர்களும் தான் இந்த இரண்டு சமூகத்தினர் இடையேயும் வெறுப்பை வளர்ப்பதிலும் தமிழர்களை நசுக்குவதிலும் ஈடுபட்டனர்.

பிற்காலத்தில் இலங்கைப் பிரதமரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க (உலகின் முதல் பெண் பிரதமரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கணவர்; சந்திரிகாவின் தந்தை) தமிழர்களிடம் ஓரளவு அனுதாபம் உடையவர்.

இலங்கையை நீண்டகாலம் மூன்று அரசுகள் ஆண்டு வந்துள்ளன. இந்த மூன்று பகுதியினரும் தனித்தனியே நாகரிகங்கள், பழக்கவழக்கங்கள் கொண்டவர்கள்.



பண்டார நாயகா



பிரதமர் டி.எஸ்.சேனநாயகா

எனவே, இலங்கையை மூன்று மாகாணங்களாகப் பிரித்து மாகாண சுயாட்சி வழங்க வேண்டும்.

மூன்று மாகாணங்களுக்கும் பொதுவான மத்திய அரசு அமைய வேண்டும் என்பது பண்டாரநாயக்கவின் கருத்தாகும். (தொடரும்)




# சிறுவர் அரங்கம்

1276

# கீக்கீ... கீக்கீ.. கீக்கீ... கீக்கீ...!





....படுத்தவுடன் தூங்கியும் விட்டான்.

அப்போதுதான் விடிந்திருந்தது.

கிளிகளின் கீச் சத்தம் அவனை எழுப்பியது.

கண் விழித்துப் பார்த்தான்.

அவனைச் சுற்றிலும் கிளிகள்.

பறந்துகொண்டும் கீ கீ என்று பேசிக்கொண்டும் நடந்துகொண்டும் இருந்தன.

சில கிளிகள் பறந்து அவனுடைய மேசை மீது உட்கார்ந்தன.

ஒரு கிளி ஜன்னல் கம்பியில் தலைகீழாக நடை பழகிக்கொண்டிருந்தது.

இன்னொரு கிளி மின் விசிறி மீது உட்கார்ந்து தலையைத் திருப்பி எல்லோரையும் பார்த்துக்கொண்டிருந்தது.

இரண்டு கிளிகள் தங்களுடைய அலகுகளால் ஒன்றோடொன்று உரசி விளையாடின.

கிருசுக்கு ஒரே ஆச்சரியம்.

அப்பாவிடம் ரெண்டு கிளிகள் தானே கேட்டோம்.

எதுக்கு இத்தனை கிளிகளை வாங்கிட்டு வந்தார் என்று நினைத்தான்.

திரும்பி அப்பாவைக் கூப்பிட வாயெடுத்தான்.

அய்யோ, அவனால் திரும்பவே முடியலியே.

அசைய முடியாமல் கிடந்தான்.

அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது, அவன் ஒரு கூண்டுக்குள் அடைபட்டிருப்பது.

அவனுக்கு அருகில் ஒரு கிண்ணத்தில் அவனுக்குப் பிடித்த நெய்ச் சோறும், ஒரு தண்ணீர் பாட்டிலும் இருந்தன.

ஆனால், அவனால் நிமிர்ந்து நிற்கவோ, நடக்கவோ முடியவில்லை.

அவன் உட்கார மட்டுமே இடமிருந்தது.

அம்மாவையோ அப்பாவையோ காணவில்லை.

அவனைச் சுற்றிப் பெரிய வயதான கிளிகள், இளம் கிளிகள், குஞ்சுக் கிளிகள் கூட்டமாக இருந்தன.

அவனுடைய கூட்டைச் சுற்றிப் பெரிய கிளிகள் கீகீ..கீ..கீ என்று தொடர்ந்து கத்திக் கொண்டிருந்தன.

அவனுக்கு அழுகையாக வந்தது.

அவன் அம்மாவையும் அப்பாவையும் கத்திக் கூப்பிட்டான்.

கூண்டைத் திறக்க முயன்றான்.

எதுவும் நடக்கவில்லை.

வயிறு பசித்தது.

அவனுக்குப் பிடித்த நெய்ச் சோறு அருகில் இருந்தாலும் சாப்பிடப் பிடிக்கவில்லை.

பள்ளிக்கூடம் போக வேண்டிய நேரமாகிவிட்டது. அவன் ஒரு நாள் கூடப் பள்ளிக் கூடத்துக்குப் போகாமல் இருந்ததில்லை.

அவனுடைய வீட்டுக்குள் பறந்து கொண்டிருந்த கிளிகள் எல்லாம் சேர்ந்து ஒரே குரலில் கீ கீ கீ கீ என்று கத்தின.

அவனுக்கு முதலில் எதுவும் புரியவில்லை.

அப்புறம்தான் தெரிந்தது, அந்தக் கிளிகள் அதனுடைய மொழியை அவனுக்குச் சொல்லிக் கொடுக்க முயல்கின்றன என்று.

அவனுடைய முகம் கோணியது.

அழுகை பொங்கி வர பெரிய குரலில் அழத் தொடங்கினான்.

அப்போது கிருஷ்ஷைப் படுக்கையிலிருந்து அம்மா எழுப்பினார்.

கண்விழித்துப் பார்த்தான் கிருஷ்.

கூண்டையோ கிளிகளையோ காணவில்லை.

எழுந்து உட்கார்ந்து ஒரு நிமிடம் அவன் கண்ட பயங்கரக் கனவை நினைத்துப் பார்த்தான்.

உடனே அம்மாவிடம், "அம்மா எனக்குக் கிளி வேண்டாம்மா, அப்பா கிட்ட சொல்லிடு.

கிளிகளை நான் மரத்திலேயே பாத்து ரசிக்கிறேன்.

பறவைன்னா பறக்கணும்.

மனுஷன்னா நடக்கணும், இல்லியாம்மா" என்று சொன்ன கிருஷை ஆச்சரியத்துடன் பார்த்தார் அம்மா.

(முற்றும்)

10.2015 28

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖306 - மாக்செண்டியஸ் உரோமப் பேரரசன் ஆனான்.
- ❖312 - முதலாம் கொன்ஸ்டண்டீன் மாக்செண்டியசைத் தோற்கடித்து உரோமப் பேரரசனானான்.
- ❖1492 - ஸ்பெயின் நாட்டுக் கடலோடியான கொலம்பசும் அவரது கூட்டத்தினரும் வழி தவறிச் சென்று கியூபாவில் க்ரை இறங்கினர்.
- ❖1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பொஸ்டனிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதை பிரித்தானியா தடுத்தது.
- ❖1834 - சுவான் ஆற்றுக் குடியேற்றத்தில் (தற்போதய மேற்கு அவுஸ்திரேலியாவில்) பழங்குடிகளுக்கும் ஆங்கிலேயக் குடியேற்ற வாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பல பழங்குடியினர் கொல்லப்பட்டனர்.
- ❖1886 - நியூயோர்க்கில் அமெரிக்க ஜனாதிபதி குரோவர் கிளீவ்லாண்ட் விடுதலைச் சிலையைத் திறந்து வைத்தார்.
- ❖1918 - முதலாம் உலகப் போர்: ஆஸ்திரியா-ஹங்கேரியிடமிருந்து செக்கொசிலவாக்கியா விடுதலை பெற்றது.
- ❖1918 - மேற்கு கலீசியாவில் புதிய போலந்து அரசு அமைக்கப்பட்டது,
- ❖1922 - முசோலினி தலைமையில் இத்தாலிய பாசிஸ்டுகள் உரோம் நகரை சென்றடைந்து இத்தாலிய அரசைக் கைப்பற்றினர்.
- ❖1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி, அல்பேனியா ஊடாக கிறீஸ் நாட்டைக் கைப்பற்றியது. இந்நாள் கிறீசின் "ஓக்கி நாள்" ஆக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.
- ❖1941 - லித்துவேனியாவின் கௌனாஸ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியர் 9,000 யூதர்களை சுட்டுக் கொன்று அதே இடத்தில் புதைத்தனர்.
- ❖1942 - கனடா முதல் அலாஸ்கா வரையான அலாஸ்கா நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.
- ❖1942 - போலந்தின் கிராக்கொவ் நகரிலிருந்து 2,000 யூத சிறுவர்களும் 6,000 பெரியவர்களும் நாசிகளினால் வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர்.
- ❖1948 - சுவிட்சர்லாந்து இயற்பியலாளர் போல் முல்லர டிடிரியைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு பெற்றார்.
- ❖1962 - கியூபாவிலிருந்து சோவியத் ஏவுகணைகளை அகற்றுவதாக சோவியத் தலைவர் நிக்கிட்டா குருஷேவ் அறிவித்தார்.
- ❖1971 - ஐக்கிய இராச்சியம் தனது முதலாவது (2007 வரை ஒன்றே ஒன்றுமான) "புரொஸ்பெரோ" என்ற செய்மதியை விண்ணுக்கு ஏவியது.
- ❖1972 - முதலாவது ஏர்பஸ் A300 பறக்க விடப்பட்டது.
- ❖1985 - சண்டினீஸ்டாவின் டானியேல் ஒர்ட்டேகா நிக்கராகுவாவின் அதிபரானார்.
- ❖1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.
- ❖2001 - பாகிஸ்தானில் கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்து தீவிரவாதிகள் கண்முடித்தனமாக சுட்டதில் பெண்கள் உள்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖2001 - கேரளாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக நாகர்கோயில் பகுதியில் இலேசான நில அதிர்வு ஏற்பட்டது.
- ❖2006 - 1930களில் ரஷ்யக் கம்யூனிஸ்டுகளால் உக்ரேனின் பிகீவ்னியா காட்டில் கொலை செய்யப்பட்ட 817 உக்ரேனியர்களினது இறுதிக் கிரியைகள் அவர்கள் கொலை செய்யப்பட்ட இடத்தில் இடம்பெற்றன.
- ❖2006 - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 8 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் ஜெனீவாவில் மீண்டும் ஆரம்பமாயின.

### பிறப்புக்கள்

- ❖1955 - பில் கேட்ஸ், மைக்ரோசாப்ட் நிறுவனர், கணிப்பொறி மென்பொருள் வல்லுனர்
- ❖1956 - மஹ்மூத் அஹ்மதிநெஜாத், ஈரான் குடியரசுத் தலைவர்

### இறப்புகள்

- ❖1627 - ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னன் (பி. 1569)
- ❖1704 - ஜான் லாக், ஆங்கிலேய தத்துவவியலாளர் (பி. 1632)
- ❖1900 - மாக்ஸ் முல்லர், ஜேர்மனிய மொழியியலாளர் (பி. 1823)
- ❖1997 - மைசூர் வீ. துரைசுவாமி ஐயங்கார், கர்நாடக இசை வீணை வாத்தியக்கலைஞர் (பி: 1920)
- ❖2014 - மைக்கேல் சாட்டா, சாம்பியாவின் அரசுத் தலைவர் (பி. 1937)

வாழ்க்கையில் இருபகுதிகள் உண்டு. கடந்த காலம் என்பது ஒரு கனவு. வருங்காலம் என்பது ஏக்கப் பெருமூச்சு. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சர்வதேசத்தின் ஆதரவுடன் தமிழீழம் அமைப்போம்!

இலங்கை தனிச் சிங்கள நாடு என்றால், நாங்கள் சர்வதேசத்தின் ஆதரவுடன் தமிழீழம் அமைப்போம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா பாராளுமன்றத்தில் அண்மையில் கூளுரைத்திருந்தார்.

சிங்கள தேசம் என்று நீங்கள் கூறினால் நாங்கள் தமிழீழம் அமைப்போம் என்று மாவை கூறியிருப்பது குறித்து ஒரு பொதுவான அவிப்பிராயத்தை தமிழ் மக்களிடம் கேட்டால் மக்களின் பதில் என்னவாக இருக்கும் என்று ஒரு கற்பனை செய்து கொண்டோம்.

முதலில் தமிழ் அரசியல் தலைமையிடம் கேட்டால்,

**சம்பந்தர்:**நான் படிச்சுப் படிச்சு சொன்னான் தமிழீழம் என்ற பேச்சை கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மறந்துவிட வேணும் எண்டு.

ஆனால் பொறுத்த நேரத்தில் மாவை தமிழீழம் அமைப்போம் என்று சொல்லி விட்டார். இது அவரின் தனிப்பட்ட கருத்து. அவர் விரும்பினால் தமிழீழம் அமைக்கலாம். இதுபற்றி இப்போதைக்கு நாங்கள் கருத்து எதனையும் சொல்ல முடியாது. கூடி ஆராய்ந்துதான் முடிவு எடுக்க முடியும்.

**கலைஞர்:**தமிழீழம் மலர்ந்தால் மிக்க மகிழ்ச்சி. அதுவும் மாவை சேனாதி போராடி தமிழீழம் கண்டால் என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

தமிழீழம் மலர்ந்தது என்ற மனமகிழ்வோடு மரணிப்பேன் வாழ்க தமிழ். வாழ்க மாவை.

**சுரேஸ் பிரேமச்சந்திரன்:**அண்ணன் மாவை நடக்கக் கூடியதைக் கதைப்பது அவருக்கும் நல்லது. தமிழ் மக்களுக்கும் நல்லது.

**பொதுமக்கள்:....**

**முன்னாள் போராளிகள்:**தமிழீழம் அமைக்க ஓடி வாங்க! ஓடிவாங்க! என்று நாம் கத்திய போது எட்டிப் பார்க்காதவர் இனி தமிழீழம் அமைக்கப் போகிறாராம். தமிழீழத்திற்கான பெரிய ஆயுதப் போராட்டத்தை உலகம் தோற்கடித்த போது, ஏன் என்று கேட்காதவர் இப்போது தமிழீழம் என்று சொல்வது எந்த வகையில் நியாயம்.

**மாவீரரின் பெற்றோர்:**ஆ... கடவுளே! எங்கள் பிள்ளைகளைத் தொலைத்துப் போட்டு இப்ப அவர் தமிழீழம் காணப் போகிறாராம். வெளிநாட்டில இருக்கிற அவற்ற பிள்ளைகளோ இங்க வந்து ஆயுதம் ஏந்திப் போராடப் போகினம். எங்கட பிள்ளைகளை இழந்து நாங்கள் படும் வேதனை. முந்தியும் இப்படியான கோஷங்கள் எழுப்பித்தானே எங்கட இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினவர்கள்.

வாழ வேண்டிய பிள்ளைகளை அழிச்சுப் போட்டு நாசமறுப்பார் பிறகும் தமிழீழம் என்று சொல்லுகினம். உவையளின் உசுப்பேத்தல ஆரும் நம்பிப் போடாதிங்க...

**வன்னியில் பாதிக்கப்பட்டவர்கள்:**கடவுளே...! கடவுளே... பிறகும் ஏதேனும் தேர்தல் வரப்போகுதோ... தமிழீழம் என்று சொல்ல ஆரம்பித்திருக்கினம்.

வன்னியில 18 தடவை இடப்பெயர்வு, முட்கம்பி வேலிக்குள்ள அடைப்பு, எல்லாத் துன்பங்களையும் இந்த மண்ணில அனுபவிச்சுப் போட்டம்.

இவர் இப்ப தமிழீழம் என்று சொல்லுகிறது சரியோ. கந்தறுத்த சர்வதேசத்தை நம்பித்தானே நாங்கள் எல்லாத்தையும் இழந்தம். இப்ப மாவை ஐயா கேட்டவுடன சர்வதேசம் வந்து தமிழீழத்தைப் பிரித்துக் கொடுக்குமோ. பேசுவதற்கு முதல் என்ன பேசுறம் என்பதை ஒருக்கால் சிந்தித்துப் பேசுங்கள்.

இப்படியாக அவர்களின் கருத்துக்கள் அமையலாம் என்பது கற்பனை மட்டுமே.

# மகிந்தவின் அனுமதியுடனேயே அமைச்சைப் பொறுப்பேற்றேன்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்னரே தாம் பிரதி அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றதாக அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார். தேசிய அரசாங்கமொன்றில்லாமல் நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது.

சுசில் பிரேமஜயந்த மற்றும் எம்மவர்கள், எனது ஆதரவாளர்கள் விடுத்த கடுமையான கோரிக்கைக்கு அமையவே பிரதி அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றேன்.

முன்னாள் ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கை குறித்து அறிவித்து அவரது ஆசீர்வாதத்துடன் நான் பிரதி அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டேன்.

நான் 26 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டுள்ளேன். எனினும் அரசியல் ஊடாக நான் பணம் எதனையும் சம்பாதிக்கவில்லை.

மக்களுக்கு சேவையாற்றுவதே எனது இலக்கு என சுமேதா ஜயசேன சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (12)

# நவம்பர் 13 காலியில் மர்மப்பொருள் விழும்!

(கொழும்பு)

நவம்பர் மாதம் 13-ம் திகதி காலி பிரதேசத்தில் 65 கிலோ மீட்டர் தூர கடற்பகுதியில் மர்மப் பொருள் ஒன்று வானில் இருந்து விழவுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தப் பொருள் சுமார் 7 அடி அளவு இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மர்மப் பொருள் என்னவென்பது தொடர்பில் முதலில் கண்டறியப்படாத நிலையில் பின்னர் வானியலாளர்கள் அது தொடர்பில் கண்டுபிடித்துள்ளனர்.

இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன் விண்ணில் செலுத்தப்பட்ட அப்பலோ விண்கலத்தின் பாகம் அல்லது அதற்குப் பின்னர் விண்ணில் செலுத்தப்பட்ட லூனா விண்கலத்தின் பாகமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

**WT1190F** என பெயரிடப்பட டுள்ள இந்த மர்மப் பொருள் இலங்கை நேரப்படி முறபகல் 11.50 அளவில் கடலில் விழலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# வடக்குக்கான சுற்றுலாமையம் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு உட்பட்ட பிரதேசங்களே முதல்கட்டமாக நவீன மயப்படுத்தப்படவுள்ளன.

வடமாகாண உள்ளூராட்சி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வடக்குக்கான சுற்றுலாமையம் உருவாக்கப்படவுள்ளது. இதனூடாக உள்ளூராட்சி சபைகளின் சுற்றுலாத்துறை மீள் உருவாக்கம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் மாவட்ட ரீதியாக சுற்றுலா வழிகாட்டியும் தயாரிக்கப்படவுள்ளது.

வடக்கில் உருவாக்கப் பெறும் சுற்றுலாத்துறை ஊடாக வேலைவாய்ப்புகளும், தொழில் பயிற்சிகளும் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சிச் சபைகள் உட்பட வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சுற்றுலாத்துறை சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (12)

# மோனோ ரயில் செயற்றிட்டம் கைவிடப்பட்டது!

(கொழும்பு)

இலங்கையில்மோனோ ரயில்சேவையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தை போக்குவரத்து அமைச்சு தற்போது கைவிட்டுள்ளது. கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மோனோ ரயில் போக்குவரத்தை அறிமுகப்படுத்த புதிய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

அதற்கான சாத்தியவள ஆய்வுகளும் நடைபெற்று, செயற்றிட்டத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பும் மலேசிய நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மோனோ ரயில் போக்குவரத்து வழித்தடத்தை அமைப்பதற்காக பாரிய தொகை செலவிடப்பட வேண்டி இருப்பதால் அத்திட்டத்தை கைவிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. இதன் காரணமாக மோனோ ரயில் தொடர்பான எதிர்பார்ப்பில் இருந்த பொது மக்கள் கடும் ஏமாற்றமடைந்துள்ளனர். (12)

# ம.உ.உறுப்பினர் பதவி ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக குழுவின் உறுப்பினர் ஒருவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தினால் உருவாக்கபட்ட பத்து சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர் மற்றும் தலைவர்கள் தற்போது நியமிக்கப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக அண்மையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கும் உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

அவ்வாறு புதிதாக நியமனம் பெற்ற உறுப்பினரான லயனல் பெர்னாண்டோ என்பவர் நேற்று தனது தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காகவேதான் பதவிவிலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் புதிய தலைவியாக பேராசிரியர் தீபிகா உடுகம நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் உறுப்பினர்களாக சாலிய பீரிஸ், கஸ்ஸாலி ஹுசைன், சற்குணநாயகம் ஆகியோர் அதன் ஏனைய அங்கத்தவர்களாக கடமையாற்றுகின்றனர். (12)

# மது அருந்தக்கொடுத்து காரை திருடிய நண்பன்

(கொழும்பு)

தனது நண்பனுக்கு மது அருந்த கொடுத்து நண்பனின் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான காரையும் காரிலிருந்த வங்கி ஏ.டி.எம். அட்டையையும் கையடக்கத் தொலைபேசியையும் திருடிய கண் பார்வையற்ற நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வென்னப்புவ, சிறிகம்பல பிரதேசத்தைச் சேர்ந்த ஹெட்டியாராச்சிலாகே தினேஸ் பியதாச என்பவரே கைது செய்யப்பட்ட சந்தேக நபராவார். கொச்சிக் கடையைச் சேர்ந்த எல்.ஏ.சமிந்ததினுஸ்க (வயது-35) எனபவரே முறைப்பாளராவர்

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, முறைப்பாட்டாளரும் சந்தேக நபரும் நண்பர்களாவர். இருவரும் பேசமுடியாத மற்றும் காது கேளாதவர்களாவர்.

முறைப்பாட்டாளர் தனியார் கம்பனியொன்றில் பணியாற்றுபவராவார். அவருக்கு அந்த நிறுவனத்தால் கார் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற கடந்த வெள்ளிக்கிழமை அன்று சந்தேக நபர் மதுபான போத்தல் ஒன்றை எடுத்துக் கொண்டு முறைப்பாட்டாளரின் வீட்டுக்குச் சென்றுள்ளார், அங்கு இருவரும் நள்ளிரவு வரை மது அருந்தியுள்ளனர். முறைப்பாட்டாளர் மதுபோதையில் இருந்த போது சந்தேக நபர் அவரின் கார் சாவியை எடுத்துக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் காரை கடத்திச் சென்றுள்ளார். (இ-7-10)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

# நிஜமான படிப்பு எது?




✦ மீன்கொத்திப் பறவை போன்று உலகத்தில் வாழ்ந்திரு. அது நீருக்குள் மூழ்குகின்ற போது சிறகுகளில் கொஞ்சம் நீர் ஒட்டிக் கொண்டிருக்கிறது. வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் ஒட்டிக் கொண்டிருக்கும் நீர் அகன்று விடுகிறது. அதுபோல் உலக வாழ்க்கையில் பற்றற்றவராய் இருங்கள்.


✦ பணபலம் உடையவர்கள் தங்களுடைய செல்வத்தை சொந்த நலனுக்கு மட்டுமல்லாது தங்களுக்குத் தெரிந்து கஷ்டப்படுகின்ற மக்களுக்கும், பிணியால் வாடும் நோயாளிகளுக்கும் உதவி புரிவதைத் தங்களின் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.

✦ உலகைப் படைத்த இறைவனே அனைத்துமாய் இருக்கிறான் என்ற மெய்ஞ்ஞானம் வரும் வரையில் மனிதனுக்குப் பிறவிகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். வெறும் படிப்பால் மட்டுமே பயன் ஒன்றும் விளையாது. கற்பது என்பதே கடவுளைப் பற்றி அறிவதற்கான உபாயம் என்பதை உணர்ந்து கற்க வேண்டும்.

✦ மற்ற படிப்பெல்லாம் வெறும் உலகியல் கல்வியாகும். கடவுளை அறிவது என்பது என்றென்றும் உறுதுணையாய் நம்முடனே வரும். தெய்வீகப் படங்களை, நமது அறையில் கண் பார்வையில் படும்படி மாட்டி இருப்பது நல்லது. ஏனென்றால் நாம் காணுகின்ற காட்சியினால் மனம் நல்ல அருள் உணர்வுகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளும்.

# ஜப்பான் கராத்தே போட்டியில் யாழ்.வீரர் விஜயராஜ் பங்கேற்பு






17வது யுனிவேர்சல் சோட்டாகான் கராத்தே யூனியன் (USKU) ஜப்பானில் தசனபே என்னும் இடத்தில் 18.10.2015 இல் நடைபெற்றது. 11 நாடுகள் பங்குபற்றிய இப்போட்டிக்கு இலங்கைக்கான பிரதிநிதி சென்சே Z.A.RAUF தலைமையில் 6 வீரர்கள் பங்குபற்றினர்.

இப்போட்டியில் வடமாகாணத்தில் இருந்து சென்சே சின்னத்துரை விஜயராஜ் கலந்து கொண்டு காட்டா போட்டியில்(Best 8) சிறந்த எட்டு வீரர்களுள் ஒருவராக தெரிவு செய் யப்பட்டதுடன் USKU பிரதம ஆசிரியராகிய பேராசான் கெனிச்சி(F) ஃபுக்காமிசியிடம் WKF-ஜப்பான் தேசிய வீரராகிய ரகோட்டாவிடமும் சூமா (குரூப் காட்டா உலக சம்பியன்) மேலதிக பயிற்சி யைப் பெற்றதோடு USKUவின் பரீட்சை யில் (Grade) பங்கு கொண்டதோடு 4 ஆவது கறுப்புபட்டியை (International) பெற்றுள்ளார்.

இப்போட்டி 10நாட்கள் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

# உலக பெண்கள் டென்னிஸ் சானியா மிர்சா ஜோடி வெற்றி



'டொப்-8' வீராங்கனைகள் பங்கேற்கும் உலக பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஒற்றையர் ஆட்டம் ஒன்றில் 3-ம் நிலை வீராங்கனை கார்பின் முகுருஜா (ஸ்பெயின்) 6-3, 7-6 (7-4) என்ற நேர்செட்டில் செக் குடியரசு வீராங்கனை சபரோவாவை தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் (ஜேர்மனி) 6-2, 7-6 (7-3) என்ற நேர்செட்டில் கிவிடோவாவை (செக் குடியரசு) வீழ்த்தினார். பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா)-மார்ட்டினாகிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட்டில் அமெரிக்காவின் கோப்ஸ் ஜோன்ஸ்-அபிகைல் ஸ்பியர்ஸ் இணையை தோற்கடித்தது. (க)

# வட்டக்கச்சி லக்கிஸ்ராரை வீழ்த்தி உருத்திரபுரம் வி.கழகம் சம்பியன்





கிளிநொச்சி முதுமுறிப்பு உதய சூரியன் பெருமையுடன் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுபபோட்டியில் உருத்திரபுரம் விளையாடடுக்கழகம் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.


உதயசூரியன் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேச செயலகங்களில் பதிவு செய்த கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் தெரிவான வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிரத்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் 3:1 என்ற கோல்கணக்கில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்துக் கொணடது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இ.பத்மகுமார் தெரிவுசெய்யப்பட்டார்.

# இந்திய அணியின் தோல்விக்கு மும்பை மைதானமே காரணமாம்

## ரவி சாஸ்திரியின் கண்டுபிடிப்பு



தென்னாபிரிக்காவுக்கு எதிரான 5 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணி 214 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை தழுவியது.

இந்திய அணி இயக்குனர் ரவி சாஸ்திரி இந்த தோல்விக்கு ஆடுகளம் மீது பழி போட்டுள்ளார். இதற்காக அவர் மும்பை மைதான வான்கடே பராமரிப்பாளரை வசை பாடியுள்ளார.

சென்னையில் நடந்த 4 ஆவது ஒருநாள் போட்டியில் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருந்தது. இதை பயன்படுத்தி இந்திய அணி வெற்றி பெற்றது. 5 ஆவது போட்டி நடந்த மும்பை வான்கடே மைதானத்தையும் இதே மாதிரி சுழற்பந்துக்கு சாதகமாக அமைக்குமாறு இந்திய அணி நிர்வாகம் கேட்டுக் கொண்டது.

திடீரென விடுக்கப்பட்ட இந்த கோரிக்கையால் ஆடுகள பராமரிப்பாளரும், முன்னாள் வீரருமான சுதிர் நாயக் குழப்பம் அடைந்தார். அவரால் கடைசி நேரத்தில் ஆடுகளத்தை மாற்றம் செய்ய முடியவில்லை.


மும்பையில் நடந்த இந்த ஆட்டத்தில் இந்தியா மோசமாக தோற்றதால் ரவிசாஸ்திரி அதிருப்தி அடைந்தார். ஆடுகள பராமரிப்பாளர் சுதிர் நாயக்கிடம் சென்று சிறப்பான ஆடுகளம் அமைத்து உள்ளீர்கள் என்று கேலியாக கூறியுள்ளார். அதோடு தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதுபற்றி சுதிர்நாயக் கூறியதாவது,

பட்டிங்குக்கு ஏற்ற ஆடுகளத்தை நான்ஏற்கனவே அமைத்து விட்டேன். இந்திய அணி நிர்வாகம் என்னிடம் முன்கூட்டியே ஆடுகளத்தை மாற்றி அமைக்குமாறு கூறவில்லை. 2 தினங்களுக்கு முன்பு எப்படி மாற்றி அமைக்க முடியும்? போதுமான காலம் இல்லை.

இது தொடர்பாக ரவி சாஸ்திரி என்னை கேலி செய்தார். அதோடு என்னை தகாத வார்த்தைகளை பயன படுத்தி அவமதிக்கவும் செய்தார். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (க)

# டோனியின் திட்டம் சரியில்லை-கவாஸ்கர் பகிரங்க குற்றச்சாட்டு




இந்திய அணித்தலைவர் டோனிக்கு சரியான திட்டத்தை செயற்படுததும் திறன் இல்லை என்று கவாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இதில் இருபது-20 தொடரை கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரையும் 3-2 என்ற கணக்கில் வென்றது.

அதிலும், மும்பையில் நடந்த கடைசி ஒருநாள் போட்டி இந்திய அணிக்கு பெரிய அடியாக அமைந்து விட்டது.

இந்நிலையில் இந்திய அணித் தலைவர் டோனியிடம் சரியான திட்டம் இல்லை என்றும், திட்டங்களை செயற்படுத்தும் திறமையும் இல்லை எனவும் முன்னாள் தலைவர் கவாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், அவர் கூறுகையில், "முன்பு டோனியிடம் பந்துவீச்சில் மாற்றம் செய்யும் திட்டங்கள் சிறப்பாக இருக்கும். ஆனால் இந்தப் போட்டியில் ஒட்டு மொத்த பந்து வீச்சாளர்களும் சொதப்பி விட்டனர்.

வான்கடே ஆடுகளம் நல்ல திருப்பம் தரக் கூடியது. ஆனால் அந்த சுழலுக்கு ஏற்ப நமது பந்து வீச்சாளர்கள் திறமையாக செயற்பட தவறி விட்டனர்.

இந்திய பந்துவீச்சாளர்கள் இருபது-20, ஒருநாள் தொடரில் எந்த அளவு மந்தமாக செயற்பட்டனர் என்பது அனைவருக்கும் தெரியும். இந்திய அணியில் பந்துவீச்சு பிரிவு அந்த அளவுக்கு மோசமாக உள்ளது" என்று கூறியுள்ளார்.

மேலும், "இந்திய அணியில் அஸ்வின் இல்லாதது பேரிழப்பாக மாறி விட்டது என நினைக்கிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# 23 இந்திய மீனவரும் விளக்கமறியலில் வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மற்றும் ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த 23 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 மற்றும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்

நேற்று முன்தினம் மாலை நெடுந்தீவு கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 13 இந்திய மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய போது அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி செ.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த சேர்ந்த 10 இந்திய மீனவர்களையும் பருத்தித்துறை நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய போது அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி உ.விஜயராணி உத்தரவிட்டார். (9)

# மணலுடன் தப்பிய ஹன்டர் மரத்துடன் மோதி விபத்து



(கரணவாய்)

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஹண்டர் ரக வாகனம் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டதுடன் வாகனமும் கைப்பற்றப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் நேற்றைய தினம் தெரிவித்துள்ளனர்.

மணற்காட்டுப் பகுதியூடாக மணல் ஏற்றிக்கொண்டு வந்த மேற்படி ஹன்டர் ரக வாகனம் நெல்லியடிச் சந்தியில் வைத்து நெல்லியடிப் பொலிஸாரினால் இடைமறிக்கப்பட்டது.

சாரதி வாகனத்தை நிறுத்தாது தப்பியோடியுள்ளார். இதேவேளை மேற்படி வாகனத்தை பொலிஸார் துரத்திச் சென்ற போது அவ் வாகனம் 750 வீதி வழியாக வந்து பலாலி வீதியை அடைந்து சென்று கொண்டிருந்த போது கோண்டாவில் பகுதியில் மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

சாரதி எவ்வித ஆபத்தும் இன்றி தப்பிக் கொண்டதுடன் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார். கைது செய்யப்பட்ட சாரதி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிய வந்தது. (5-60)

# ஜனாதிபதியின் மட்டு.விஜயம் திடீர் ரத்து!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மட்டக்களப்புக்கான விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் மிகமோசமான கால நிலை காரணமாகவே இவ் விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மங்களராமய பௌத்த விகாரை, மட்டக்களப்பு வீரகத்தி பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயம் ஆகியவற்றுக்குச் சென்று பிரார்த்தனை மற்றும் சமய நிகழ்வுகளில் ஜனாதிபதி நேற்று கலந்து கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், பருவகால அடைமழை பெய்யத் தொடங்கியிருப்பதால் ஜனாதிபதியின் விஜயம் திட்டமிட்டபடி இடம் பெறுமா என்ற கேள்விகளும் முன்னரே எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பல பகுதிகளில் பாரிய சேதங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

அந்தவகையில் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தின் புளியடி வீதியில் அமைந்துள்ள பாலம் ஒன்று தொடர் மழை காரணமாக முற்றாக சேதம் அடைந்துள்ளது. இதனால் அவ்வழியால் மக்கள் எவரும் பயணிக்க முடியாத நிலை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (12)

# மகிந்தவின் மைத்துனர்

## நிஷாந்த விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு


(கொழும்பு)

இலங்கை விமான சேவையில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான விசாரணைகளை பாரிய ஊழல் மற்றும் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இதன்படி, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் இலங்கை விமான சேவையின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்க ஆகியோர் பாரிய ஊழல் மற்றும் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி ஆணைக்குழுவில் பிரசன்னமாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிஷாந்த விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)



பதில் பிரதம நீதியரசராக உச்ச நீதிமன்ற நீதியரசர் பிரியசாத் டெப் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில், பதில் பிரதம நீதியரசராக பிரியசாத் டெப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேயகோனும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

# அமெரிக்க அதிகாரி இலங்கை வந்தடைந்தார்!

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், பூகோள பெண்கள் விவகாரங்களுக்கான தூதுவர் கத்தரின் ருசெல், இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்துள்ளார்.

அவர் நாளை வரை அவர் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைககளம் தெரிவித்துள்ளது.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் போது, அரசாங்க அதிகாரிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், தொழில் முனைவோர், மதத் தலைவர்கள் உள்ளிட்டோரைச் சந்தித்து, பாலினத்தை அடிப்படையாக கொண்ட வன்முறைகள், பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்துதல், அமைதி மற்றும் பாதுகாப்பில் பெண்களை ஈடுபடுத்தல் உள்ளிட்ட பரந்துபட்ட விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளார்.

பூகோள பெண்கள் விவகாரங்களுக்கான தூதுவர் கத்தரின் ருசேல் அம்மையார், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தெற்காசியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, இலங்கைக்கும் வரத்திட்டமிட்டிருந்தார். ஆனால் அப்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவரது பயணத்துக்கு இடையூறு ஏற்படுத்தி அந்தப் பணத்தை இடை நிறுத்தியிருந்தது. (12)

# பாலச்சந்திரன், இசைப்பிரியா படுகொலை விசாரணை அறிக்கை பெப்ரவரியில்

(கொழும்பு)

இசைப்பிரியா, பாலச்சந்திரன் படுகொலைகள் உட்பட நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பில் ஐந்து பேரடங்கிய ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று விசாரணகளை நடத்தி வருகின்றது என்றும், இந்த விசாரணைகளை ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் கண்காணித்து வருகின்றார் என்றும் காணாமல்போகச் செய்யப்பட்டோர் தொடர்பிலும் போர்க் குற்றங்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி குழு எதிர்வரும் ஜனவரி இறுதியில் விசாரணை அறிக்கையைத் தன்னிடம் ஒப்படைக்கும் என்றும், அதன்பின்னர் பெப்ரவரியில் விசாரணை அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, நவம்பர் முதல் காணாமல்போனோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக பணிகள் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்ஸ்வெல் பரணகம தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு விரைவில் வெளிநாடு செல்லவுள்ளார். அவர் நாடு திரும்பியதும் ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்திப்பதற்கும் மேற்படி குழு உத்தேசித்துள்ளது.

வெள்ளைக்கொடி விவகாரம் பற்றி கருத்து வெளியிட்ட பரணகம, நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பில் எமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக நாம் ஐவரடங்கிய ஓய்வுபெற்ற பொலிஸ் குழுவொன்றை அமைத்தோம். இதில் பெண் அதிகாரியொருவரும் உள்ளடங்குகின்றார்.

இசைப்பிரியா, பாலச்சந்திரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளையும் ஆராயும் பொறுப்பு மேற்படிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சனல் 4 ஊடகத்தில் வெளியான விடயங்கள் பற்றியும் ஆராயப்படும். விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், இத்தகைய விசாரணைகளில் அனுபவம் மிக்கவர்கள்.

இந்த விசாரணைகளை நடுநிலையாக நடத்துவதற்கு, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவினர், வைத்திய சாலைகள் மீது அரச படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதான குற்றச்சாட்டுக் குறித்தும் விசாரணை நடத்துவர்.

எட்டு மாவட்டங்களுக்கும் சென்று விசாரணைகளை நடத்தும் இந்தக் குழுவினர் தமது அறிக்கையை வரும் பெப்ரவரி மாதம் சமர்ப்பிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றார். (12)

## இன்றும்...

களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கன மழை தொடர்ந்தும் நீடிப்பதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. (12)

## இம்மானுவேல்...

வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் அவசர அழைப்பு விடுத்துள்ளனர்.

இவர்களது அழைப்பு தொடர்பாக, இடதுசாரி தலைவர் விக்கிரமபாகு கருணாரட்னவுக்கு உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இம்மானுவேல் மின்னஞ்சல் மூலமாக தெரியப்படுத்தியுள்ளார்.

அழைப்பு எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் தென்னிலங்கையில் உள்ள மிதவாதிகளுடன் இணைந்து கடமையாற்ற தான் ஆர்வமாக உள்ளேன் என்றும், குறைந்தது அரசியல்வாதிகளின் பொய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கோடு இலங்கை நோக்கி வருவதனை அதிகமாக பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறேன் என்றும் விக்கிரமபாகு கருணாரட்னவுககு இம்மானுவேல் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த அருட்தந்தை அவர்களே! உங்கள் வரவினை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றோம் என விக்கிரமபாகு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

அருட்தந்தை இம்மானுவேல் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழலை அடுத்து ஜேர்மனியில் நீண்ட காலமாக வசித்து வருவதுடன் விடுதலைப் புலிகளின் அமைப்புடன் மிக நெருங்கிய தொடர்பை பேணி வந்தமையால் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் தடைசெய்யப்பட்ட 400க்கும் மேற்பட்ட புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பட்டியலில் அருட்தந்தை இம்மானுவேல் அவர்களின் பெயரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (12)

## கருணாவை...

சில கட்சிகளும் புதிய கூட்டணியை அமைக்க ஆதரவு தெரிவித்திருக்கின்றன. அவர்களுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது.

எமது கட்சியில் இணைவது தொடர்பில் புலிகளின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) பேசியிருக்கின்றார். அவரையும் எமது கூட்டணியில் இணைத்துக் கொள்ளலாம்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு முழுமையான அக்கறை இல்லை. அவர்கள் வெறுமனே தேர்தல் காலத்தில் மட்டும் குறை குற்றம் கூறி கட்சிகளுக்கிடையில் முட்டி மோதிக் கொண்டு தேர்தல் முடியும் வரை மட்டுமே கூட்டமைப்பாக செயற்படுகின்றனர்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் அவர்களுக்குள் கட்டமைப்போ அல்லது கொள்கையோ கிடையாது. அவர்கள் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு திசையில் பயணிப்பார்கள். இதுவே காலங்காலமாக நடைபெறுகிறது.

ஒரு கட்சியினரின் அதிலும் ஒரு சிலரின் முடிவே தமிழ்க் கூட்டமைப்பின் முடிவாக கூறப்படுகின்றது. இதனை அங்கத்துவக் கட்சிகள் பகிரங்கமாகவே தெரிவித்தும் வருகின்றன.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமை இல்லை. தேர்தலுக்கு மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பாவிக்கின்றனர். அதன்பின் தனித் தனியாகவே செயற்படுகின்றனர் எனவும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இதேவேளை இதுகுறித்து கருத்து வெளியிட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா),

இலங்கையின் பழமைவாய்ந்த அரசியல கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து, அரசியல் எதிர்காலப் பயணத்தினைத் தொடங்கவிருப்பதாக அறிவித்தமை தன்னுடைய தனிப்பட்ட முடிவே தவிர யாருடைய திணிப்பின் நிமிர்த்தமும் அறிவித்ததல்ல என்றார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனைவரும் முன்வரவேண்டும் எனவும், அப்படிச் சேர்வதற்காக தங்களுடைய கதவு எப்பொழுதும் திறந்திருக்கும் எனவும் ஆனந்தசங்கரி தெரிவித்திருந்தார்.

இந்த அழைப்பின் அடிப்படையில் 2,3 கட்டப் பேச்சுக்களை நடத்தியிருந்தோம். இந்தப் பேச்சுக்களில் திருப்தியான பதில்கள் கிடைத்திருந்தன. இருப்பினும், மத்திய குழுவினைக்கூட்டி - அவர்களின் ஆலோசனையினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் தனது முடிவினை அறிவிப்பதாக சங்கரி ஐயா என்னிடம் தெரிவித்திருந்தார்.

இதனை மோப்பம் பிடித்த சிலரினால், இப்பொழுதே நான் கட்சியில் இணைந்துவிட்டேன் என்பதுபோன்ற செய்தியினை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது பாரம்பரியம்மிக்க கட்சி.

இக்கட்சியினூடாகத்தான் அமிர்தலிங்கமும் எதிர்க்கட்சித் தலைவரானார். ஆனந்த சங்கரி ஐயாவும் தமிழ் மக்களைச் சுரண்டி வாழ நினைப்பவரில்லை. மக்களின் நன்மைக்காகவே குரல்கொடுத்து வந்திருக்கின்றார். ஆகையினால்தான், ஜனநாயகத்துக்காகக் குரல்கொடுக்கும் அக்கட்சியுடன் சேர்ந்து செயற்படும் எனது ஆசையினை அறிவித்திருந்தேன். இது, தமிழ் மக்களுக்கு எதிரான முடிவில்லை, மாறாக அவர்களைக் காப்பதற்காக எடுக்கப்பட்ட என்னுடைய தனிப்பட்ட முடிவே. என்னுடைய மக்களுக்கு நான் தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

சிங்களப் பேரினவாதக் கட்சியில் தொற்றிக கொண்டு வாக்குக் கேட்டு நான் வரமாட்டேன என்பதைத் தெளிவுறக் கூறியிருக்கிறேன். அதனால்தான் கடந்தமுறை தேர்தலில்கூட நான் போட்டியிடவில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்காக வாக்குக் கேட்டேன். சிங்களவர் ஒருவரே நாட்டின் ஜனாதிபதியாகலாம் என்ற யதார்த்தம் காரணமாகவே அவ்வாறு வாக்குக் கேட்டேன்.

ஆனால், தனிப்பட்ட வாக்குகளுக்காக நான பேரினவாதக் கட்சிகளில் பயணிக்க மாட்டேன். அதனால்தான், தமிழர் பாரம்பரியக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து செயற்படவிரும்பும் என்னுடைய நிலைப்பாட்டினை சங்கரி ஐயாவிடம் தெரிவித்திருந்தேன். அவரது முடிவுக்காக இப்பொழுதுவரை காத்திருக்கிறேன் என்று மேலும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (12)


### விற்பனைக்குண்டு

பாவித்த பலசரக்குக்கடை உபகரணங்கள் (குளிர்சாதனப் பெட்டிகள், அலுமாரிகள், சோக்கேஸ்) விற்பனைக்குண்டு. (2176)

தொடர்புகளுக்கு: 0779863089 0215616110

(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்)

### வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் A9 வீதியில் இருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ள 3 பரப்பு காணியில் குழாய் கிணற்றுடன் 70% கட்டிமுடிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் :

ராஜா - 0777710785

2 மணித்தியாலத்தில்

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.அழையுங்கள்

077 9086737

Computer Laptop Repair & Sale

GUNAA BEST PC

52,Hospital Road Jaffna. (Telecom Side)

### SPOKEN ENGLISH

வடமாகாணத்தில் ஆங்கிலக் கற்கைகைகளுக்காக மட்டும் இயங்கும் விசேட கல்லூரி

சனி/ஞாயிறு

மதிய நேர புதிய பிரிவு

31-10-2015 சனி மதியம் 12-00

(சனி/ஞாயிறு தினங்களில் 12-30 - 3.00 வரை)

சரளமான ஆங்கிலம் பேசுங்கள்

E-CITY COLLEGE OF ENGLISH

இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0212217106/0773400418/0774924166

### அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

இன்னும் 2 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட இரவு 8 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241

கிளிநொச்சி 0768226240

நெல்லியடி 0776699892

வல்வெட்டித்துறை 0776697960


## கைதிகளை விடுவிக்...

வித்துள்ளார்.

பல வருட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகளால் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரத போராட்டமானது, அரசாங்கம் தீர்வை பெற்றுத்தருவதாக தெரிவித்ததையடுத்து தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து நேற்று முன்தினம் பிரதமர் ரணில் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அவர்களுக்கு பிணை வழங்குவது குறித்து கவனஞ்செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12)

## புகையிரதம் மோதி...

வையினூடாக கடக்க முற்பட்ட வேளையே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12-15-283)

## இன்று கப்பலு...

களஞ்சியசாலை (கப்பல்) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. இதில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

900ற்கும் மேற்பட்ட துப்பாக்கிகளும், இரண்டு இலட்சம் துப்பாக்கி ரவைகளும் இருந்துள்ளன. இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. பலகோணங்களில் தகவல்களும் வெளியாகின. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட பாதுகாப்புத் தரப்பின் உயர்மட்ட அதிகாரிகளிடம் இது தொடர்பில் விசாரணையும் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இன்னும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள ஜே.வி.பி. இது விடயத்தில் சட்டமா அதிபர் மீது நேரடியான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், வெடிபொருட்கள் கட்டளை சட்டம் மற்றும் துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவன்கார்ட் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குப் போதுமானவளவு சாட்சியங்கள் இருந்தும் அவை செய்யப்படவில்லை என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியது.

அமைச்சரவைக் கூட்டங்களின் போதும், அவன்கார்ட் விவகாரம் பற்றி கடந்த காலங்களின் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்று வந்தன. இந்நிலையிலேயே, பாரிய நிதி மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவும் இந்த விசாரணையைக் கையிலெடுத்துள்ளது.

பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழேயே மேற்படி கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## போர்க்குற்றங்க...

ர்த்தன தெரிவித்தார்.

எமது அணியே உண்மையான எதிர்க் கட்சியாக செயற்படுகின்றது. எதிர்க்கட்சியின் உண்மையான வகிபாகத்தை நாங்களே மேற்கொண்டு வருகின்றோம். நாட்டுக்கு நலன் சேர்க்காத வகையில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளை நாங்கள் எதிர்ப்பதுடன் அவை தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுத்து வருகின்றோம். மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுப்பதே மிகப்பிரதான விடயமாகும். அதனையே நாங்கள் தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் அரசாங்கம் உள்ளக விசாரணை பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வரவேண்டுமானால அதற்கு அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறு அரசியலமைப்பை மாறறியமைக்க வேண்டுமாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். அவ்வாறு செய்யாமல் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவர முடியாது. எமது நாட்டின் சட்டக் கட்டமைப்புக்கு ஏற்ப யாரும் யாருக்கு எதிராகவும் நீதிமன்றத்தை நாடலாம். நீதியை எதிர பார்த்து நீதிமன்றம் போகலாம்.

ஆனால் அரசாங்கம் தற்போது கூறுவதைப் போன்று உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்து போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்ந்தால் இனங்களுக்கு இடையில் நம்பிக்கையின்மை மேலும் அதிகரிக்கும் என்பதுடன் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும சாத்தியம் உள்ளது. பொதுவான அடிப்படையில் ஆணைக்குழுவில் குற்றச்சாட்டுக்கள முன்வைக்கப்படும் போது அவை மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்திவிடும என்பதனை மறந்துவிடக் கூடாது என்றார். (12)

## இந்திய கொலை...

நுட்பத்தின் ஊடாக இலங்கையிலிருந்தே இந்த வழக்கு விசாரணைகளில் டக்ளஸ் பங்கேற்க உள்ளார். சென்னை நீதிமன்றில்இந்த விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1987-ம் ஆண்டு தீபாவளி பண்டிகையன்று சென்னை சூளைமேடு பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் டக்ளஸ் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்ட போதிலும் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

நீதிமன்றில் விசாரணைகளுக்கு பங்கேற்காத காரணத்தினால் டக்ளஸிற்கு பிணையில்லா பிடிவிறாந்து உத்தரவினை இந்திய நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இலங்கையில் அமைச்சுப் பதவியை பெறறுக் கொண்டதன் பின்னர் ராஜதந்திர வரப்பிரதாசங்களுடன் இந்தியா பயணம் செய்த போது, டக்ளஸை இந்திய பொலிஸார் கைது செய்யவில்லை.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் வீடியோ கொன்பிரன்ஸ் மூலம் சாட்சியமளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வழக்குடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு காரணங்களைக் காண்பித்து டக்ளஸ் விடுத்த கோரிக்கைக்கு இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாகவும் தேவை ஏற்படும் போது டக்ளஸ் நேரடியாக நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென நீதவான் செல்வம் அறிவித்துள்ளார். (12)




### யாழ் கோண்டாவில் ஈழத்து சபரிமலை ஸ்ரீ சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்

கும்பாபிஷேக தின வருடாந்த மணவாளக்கோல விசேட பஞ்ச குண்டப சஹசகஸ்ர கலச மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம்.

**01. பூர்வாங்கக் கிரியைகள்**

ஆரம்பம் - 29.10.2015 (வியாழக்கிழமை) காலை 7.00 மணி.

மாலை 4 மணிமுதல் உத்தராங்கக்கிரியைகள், சாந்திபூஜைகள்,கோமங்கள், கடஸ்தாபம், யாகபூஜை, பஞ்ச அக்கினி விபஜனம்,விஷேச கோமங்கள்

**02. சங்காபிஷேகம்**

30.10.2015 (வெள்ளிக்கிழமை)

காலை 8.00 மணிமுதல் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 11 மணியளவில் நவோத்திர சகஸ்திர கலச சங்காபிஷேகம் (1009) நடைபெறும்.

இருநாட்களும் பகல் 1.00 மணியளவில் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) வழங்கப்படும்.

மாலை 5.00 மணியளவில் விசேட பூஜையும் திருவூஞ்சல், விசேட 18-ம் படி பூஜையும் நடைபெற்று சுவாமி தெரு வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

**அடியார்கள் அனைவரும் வருகைதந்து சபரீச ஐயப்ப சுவாமியின் திருவருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

இங்ஙனம் :

ஈழத்து சபரிமலை தேவஸ்தானம், கோண்டாவில்.

(2180)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.